திருவள்ளுவர் ஆண்டு 2042

ஆகஸ்ட் - 2011

# செந்தமிழ்

தொகுதி : 55
பகுதி : 10

விலை ரூ. 10/-

## திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச் சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு




செந்தமிழ்ப் பத்திராதிபர் மகாவித்வான் மு. ராகவையங்கார் அறக்கட்டளை சொற்பொழிவின் போது
காஞ்சி காமகோடி பீட ஆதினப் புலவர் திருச்சி கல்யாண ராமன் அவர்களுக்கு கல்லூரிச் செயல்ளர் இரா. குருசாமி அவர்கள்
நினைவுப் பரிசு வழங்குகிறார். உடன் மதுரைத் தமிழ்ச்சங்கச் செயலர் இரா. அழகுமலை அவர்கள்.

# செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 55 திங்கள் இதழ்

பகுதி : 10 திருவள்ளுவர் ஆண்டு 2042

ஆகஸ்ட் 2011



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்

21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

**முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி**

தலைவர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

---

**ஆசிரியர்**

**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| பத்துப்பாட்டில் நிலப்பாகுபாடு | தெ. சக்தி ராணி | 4 |
| கண்ணதாசனின் பாடல்களில் பெண் | ந. ராஜகுமார் | 10 |
| குடும்ப விளக்கில் கொஞ்சும் உவமைகள் | புலவர் சி. பாண்டுரங்கன் | 15 |
| தனித்தமிழ் இலக்கணம் நூறடிப்பா | முனைவர் அரசக்கண்ணன் | 18 |
| பேராசிரியர் ம.ரா.போ. குருசாமியின் குருமுகம் | பேராசிரியர் முனைவர் து. மூர்த்தி | 22 |

# இதழ் மணம்

அன்புடையீர்,

**செந்தமிழ் வாசகர்களுக்கு வணக்கம்.**

ஆடிப்பெருக்கையொட்டிய ஆகஸ்டு 2011 இதழைத் தங்கள் கைகளில் தவழவிடுவதில் பெருமை அடைகிறோம். மிகச் சிறந்த கட்டுரைகளோடு நூறடிப்பாவும் தங்கள் வாசிப்பை மகிழ்வூட்டும் என நம்புகிறோம்.

பத்துப்பாட்டில் அமைந்துள்ள நிலப்பாகுபாட்டை குறிஞ்சி, முல்லை, பாலை என்ற நிலங்களோடு கொல்லை நிலம், கரம்பு நிலம், வன்நிலம், விளை நிலம் குறித்த கருத்துக்களையும் சிவகாசி செல்வி சக்திராணி அவர்கள் படைத்தளித்துள்ளார்.

சங்கக் கருத்துக்களையே சுவைத்து வரும் செந்தமிழ் வாசகர்கள் கவிஞர் கண்ணதாசனைக் காணவும் ஒரு வாய்ப்பு தந்துள்ளோம். அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆய்வறிஞர் ராஜகுமார் 'கண்ணதாசன் பாடல்களில் பெண்' என்ற தலைப்பில் பெண்ணுக்குரிய பெண்ணியம் அவளுடைய பிஞ்சு வயதிலேயே விதைக்கப்படுவதை விவரித்திருக்கிறார்.

புலவர் சி.பாண்டுரங்கன் அவர்கள் குடும்ப விளக்கில் கொட்டிக் கிடக்கும் உவமைகளைச் சுட்டிச் செல்கிறார்.

அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் து.மூர்த்தி அவர்கள் பேராசிரியர் ம.ரா.போ.குருசாமி அவர்களோடு பழகிய குருதரிசனத்தை நீண்ட கட்டுரையாக்கித் தந்து நம்மை வியப்பில் ஆழ்த்துகிறார்.

கவிதைப் பிரியர்களுக்காக முனைவர் அரசக் கண்ணன் அவர்களின் கருத்துக் கவிதையும் கட்டுரைகளோடு கலந்து வருமாறு இம்மாத இதழ் ஆக்கப்பட்டு தங்களுக்குப் படைக்கப்பட்டதில் உவகை அடைகிறோம்.

**முனைவர் க. சின்னப்பா**

**இனி நீங்களும் இதழும்....**

# பத்துப்பாட்டில் நிலப்பாகுபாடு

*தெ. சக்தி ராணி*
சிவகாசி

சங்க கால மக்களின் வாழ்க்கை நெறிமுறைகள் அகம், புறம் என்ற இரு பகுப்பினுள் அடங்குகின்றன. சங்க கால மக்கள் வாழ்வில் முக்கிய இடம் பெறுவது திணைக் கோட்பாடு. அகப் பாடல்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என பாகுபட்டிருப்பதைப் போல புறப்பாடல்கள் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை என பாகுபடுத்தப்பட்டுள்ளன. பொதுவாக இருதிணைகளும் மக்கள் நிலந்தோறும் நிலைத்து வாழ்ந்த சங்க காலச் சமுதாயத்தின் பல்வேறு பரிமாணங்களையும் காட்டுவனவாக அமைந்துள்ளன.

## தொல்காப்பியத்தில் நிலப்பாகுபாடு

தொல்காப்பியத்தில் "அகவாழ்க்கையில் மக்களது வாழ்வியலை மட்டுமல்லாது அவர்கள் வாழும் சூழ்நிலை, வாழும் இடங்கள், இடங்களின் இயல்புகள் ஆகிய அனைத்தையும் நிலநூல் அடிப்படையில் பகுத்துக் காட்டியுள்ளார்." நிலத்தை ஐந்து வகையாகப் பிரித்து அந்தந்த பகுதிகளில் வாழும் மக்கள் அவர்களின் பெயர், அப்பகுதியில் கிடைக்கும் பொருட்கள், விலங்குகள், பறவைகள், தொழில்கள் ஆகிய அனைத்தையும் வகுத்து நில நூலுக்கே ஓர் அறிமுகத்தைத் தந்துள்ளர் தொல்காப்பியர்.

## நிலவியல் இலக்கியங்கள்

ஆற்றுப்படை இலக்கியத்தை நாம் பயண இலக்கியம் என்று கூறலாம். குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு ஆகிய இரண்டும் திணைப் பெயராலேயே அமைக்கப்பட்டு பத்துப்பாட்டு நிலவியல் இலக்கியம் எனச் சிறப்பு செய்கிறது.

இதனை 'நிலநூல் இலக்கியம்' என்றும் குறிப்பிடலாம், செல்லும் வழியில் உள்ள மக்களின் வாழ்விடங்கள், இடத்திற்கு ஏற்ற உணவு,

பண்பாடு, பழக்க வழக்கங்கள், தட்பவெப்ப நிலைகள், வாழ்க்கை முறைகள், மக்களின் மனப்பாங்கு ஆகியவற்றைக் குறிப்பிடுவதால் இதனை நிலநூல் இலக்கியம் என்றும் கூறலாம்.

## நிலப்பாகுபாடு

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன நானிலங்களின் பெயர்களாகும். மனித இனம் தோன்றி வளர்ந்து நாகரிகம் பெற்ற வரலாறும் இந்நிலப்பாகுபாட்டிலே அடங்கி உள்ளது என்பது இப்பாகுபாட்டிற்குள்ள ஒரு தனிச்சிறப்பு. ''உலகில் முதன் முதலில் மனித இனம் தோன்றியது மலை முகடுகளில் தான்'' என்பது ஆராய்ச்சியாளர்கள் துணிவு.

குறிஞ்சியில் காய்கனி கிழங்குகளை உண்டு, முல்லையில் தினை விளைவித்து, மருதத்தில் நெல் விளைவித்து, நிலத்தின் தன்மையையும், அவை தரும் பயன்களையும் நன்கு உணர்ந்த தமிழ் மக்கள் கடலும் கடல் சார்ந்த பகுதியிலும் சென்று குடியேறத் தொடங்கி அங்கேயும் பயிர் விளைவிக்கலாயினர்.

பாலை என்ற ஒரு நிலம் தமிழகத்தில் தனியாக இல்லை. எந்த நிலம் வளம் குன்றி வறுமையடைகின்றதோ அதனையே பாலை எனக் கொண்டனர். பெரும்பாலும் முல்லையும், குறிஞ்சியும் வறட்சியால் தாக்குண்டு பாலை எனப் பெயர் பெறுவது உண்டு.

## குறிஞ்சி நிலம்

தமிழகத்தின் எந்தப் பகுதியிலும் ஏதேனும் ஒரு திசையிலாயினும் மலைக்காட்சி இருப்பது உண்டு. மலை தோன்றாப் பகுதியே பெரும்பாலும் தமிழகத்தில் இல்லை எனலாம். புலவர்கள் ஏனைய காட்சிகளைச் சங்க இலக்கியத்தில் குறிப்பிடுவதைக் காட்டிலும் குறிஞ்சி நிலக் காட்சிகளைக் காட்டுவதில் சிறப்பான ஆர்வம் காட்டுகின்றனர்.

## குறிஞ்சி நில வளம்

குறிஞ்சி நிலவளத்தினால் மகளிர் சுனையிற் பூத்த மலர்க் கண்ணியையும், பிற மலர்களால் இணைந்த மாலைகளையும் நறிய

பூங்கொத்துக்களையும், மராமரத்து மலர்க் கொத்துக்களை இடையே தொடுக்கப்பட்ட ஆடையையும் உடுத்தியிருந்தனர்.

*“இணைத்த கோதை அணைத்த கூந்தல்*
*முடிந்த குல்லை இடையுடை நறும்பூச்*
*செங்கால் மரா அத்த வாலிணர் இடை இடுபு”*

(திருமு. 200 -202)

என்ற திருமுருகாற்றுப்படை பாடலடிகள் வழி குறிஞ்சி நில மகளிரின் ஆடை, அந்நில மலர்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்டதை அறிந்து கொள்ள முடிகின்றது.

### விளைபொருள் வளம்

குறிஞ்சி நில மண்ணுக்கேற்ப அகில், சந்தனம் போன்ற மரங்களை அழித்து திருத்திய மேட்டு நிலத்தில் செயற்கையாக விதைத்த குறிய கதிர்களையுடைய தோரை நெல்லும், நெடிய தாளினையுடைய வெண்சிறு கடுகு, இஞ்சி, மஞ்சள், மிளகுக்கொடி போன்ற பண்டங்களும் குவிக்கப்பட்டு இருந்ததை மதுரைக் காஞ்சி பாடல் (286-287) குறிஞ்சி நிலம் செயற்கை விளைபொருட்களை விளைவிக்கும் தன்மை பெற்றிருப்பதை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளன.

### முல்லை நிலம்

முல்லை நிலம் காடுகளை சார்ந்த பகுதி என்பது அனைவரும் அறிந்ததே, அவ்வகையில் பத்துப்பாட்டு நூலில் முல்லை நிலத் தன்மையையும், அந்நிலத்திற்குரிய முதற்பொருளையும் நிரூபிக்கும் வகையில் செய்திகள் அமைந்துள்ளன.

### முல்லை நிலவளம்

வளைந்து நிற்கும் பலாமரத்தின் அடியில் குலை கொண்டு இருமருங்கும் தூங்கும் சிறிய சுளையினையுடைய பரிய பழங்கள் இருந்தன. அவற்றைப் போன்று மிளகினை ஒத்த எடையுடைய பொதிந்த சுமைகளை ஏற்கும் வலிய முதுகினை உடைய கழுதைகள் திரளோடே செல்கின்ற பாதுகாத்தலைச் செய்யும் விற்படை இருக்கின்ற ஊரினையுடைய முல்லை நிலக் காட்டுவழியை

பெரும்பாணாற்றுப்படை பாடலடிகள் (77-79) முல்லை நில முதற்பொருளை பொருத்திக் காட்டும் வகையில் சான்றாக அமைந்துள்ளன.

## மருத நிலம்

மருத நிலம் ஐவகை நிலங்களுள் வளம் சார்ந்த பகுதி என்பதால் அந்நிலப் பகுதியில் வாழ்ந்த மக்கள் செயற்கையான முறையில் பல பொருட்களை விளைவித்துப் பயன் பெற்றனர் என்பதைப் பத்துப்பாட்டு நூல்கள் எடுத்துரைக்கின்றன.

## மருத நிலவளம்

மருத நிலத்தில் அகன்ற வயல்களில் நெல் எப்போதும் விளைந்த கொண்டேயிருக்கும், கரும்பு ஆலைகளில் இடையறாது, புகை வந்து கொண்டிருப்பதால் அருகிலுள்ள நிலங்களில் உள்ள நெய்தல் மலர்கள் அழகிழந்து காணப்படும். மிகுதியான குலைகளையுடைய தென்னை மரங்களும், வாழைக் குலைகளையுடைய வாழைகளும், பாக்குக் குலைகளையுடைய பாக்கு மரங்களும் செழித்து வளர்ந்து மருத நிலத்தை வளம் செய்ததைப் பட்டினப்பாலை (16-19) பாடலடிகள் உணர்த்துகின்றன.

## நெய்தல் நிலம்

நெய்தலின் முதற்பொருள் கடற் சார்ந்த பகுதி என்பதை உறுதி செய்யும் வகையில் பத்துப்பாட்டில் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

## நெய்தல் நில வளம்

நெய்தல் கடல் நிலம் என்பதால் ஒவ்வொன்றும் ஓசையுண்டாக அலைகள் புரளுகின்ற கரிய கடற்கரையாற் சூழப்பட்ட அகன்ற நிலப்பரப்பு நெய்தல் நிலம் என்பதைப் பொருநராற்றுப்படை பாடலடிகள் (177-179) உணர்த்துகின்றன.

## பாலை நிலம்

ஐந்து வகையாகப் பகுப்பட்ட நிலங்களுள் வளம் குன்றியதாகக் கருதப்படுவது பாலை நிலம் ஆகும்.

### பாலை நிலத்தன்மை

பெரிய மூங்கில் தூற்றிலே தோன்றிய நெருப்பு அத்தூற்றினைச் சுட்டழித்தலான் ஓய்ந்த யானைகள் தமக்கு மேய்ச்சல் கிடைக்கும் நிலங்களுக்கே சென்றது. வாச்சியங்கள் முழங்கினாற் போன்ற ஓசையோடே அம்மூங்கிற்காடுகள் கணுக்கள் விட்டுப் போய் உடைந்து தட்டைகள் அழகழிந்து காணப்பட்டன. அருவிகள் இல்லாமையாலும் அழகிழந்த மலையிடத்தெ வைக்கோலைப் போன்று ஊகம் புல் உலர்ந்து தோன்றும் காட்டில் உள்ள முழைஞ்சுகள் நிறைவினையுடைய சூறாவளியை முகந்து கோடலால் காற்று மிக்க கடல் போன்று ஒலித்தது. நிழல் இன்றி உலர்ந்த முதுவேனிற் பருவத்தை உடையதுமாகிய பாலை நிலத்தன்மையை மதுரைக் காஞ்சி பாடலடிகள் (306-309) உணர்த்துகின்றன.

### பிறநிலங்கள்

நிலநூல்கள் வகுத்துள்ள ஐவகை நிலங்களைச் சங்க கால மக்கள் அறிந்ததோடு ஏனைய பிற நிலங்களையும் பாகுபடுத்தியமையைக் கா.சுப்பிரமணியம் குறிப்பிட்டுள்ளார்.

### கொல்லை நிலம்

சங்க கால மன்னர்களின் விருந்தோம்பற் சிறப்பினை எடுத்துரைக்கும் போது கொல்லை நிலம் பற்றிய செய்தி இடம் பெறுகின்றது. மன்னர்கள் அளித்த உணவினை உண்ண முடியாமல் உண்ட பொழுது எம்மை உடனிருந்தூட்டுகின்ற அம்மன்னனோடே பெரிதும் உடனுறைந்து இனிதாக இருந்து கொல்லை நிலத்தை உழுத கொழுவைப் போன்று இரவும், பகலும் இறைச்சியை மென்று மென்று எம்பற்கள் முனை மழுங்கிவிட்டன என்பதைப் பொருநராற்றுப்படை பாடலடிகள் (116-117) உணர்த்துகின்றன.

### கரம்பு நிலம்

பாலை நிலத்தில் வாழ்ந்த எயின மகளிர், பார்வைமான் கட்டி நின்ற தேய்ந்த தாளினையுடைய விளவின் நிழலையுடைய தம் முற்றத்தில் உள்ள கரம்பு நிலத்தைத் தோண்டி, அங்கு கிடைத்த புல்லரிசியை

நிலவுரலிலே சொரிந்து உலக்கையால் குற்றினர் என்பதைப் பெரும்பாணாற்றுப்படை (230-233) பாடல் வரிகள் கரம்பு நிலத்தில் கிடைத்த புல்லரிசியை எயினமகளிர் பயன்படுத்தியதை எடுத்துக்காட்டுகின்றன.

## வன்னிலம்

முல்லை நிலத்திற்கு அப்பால் தங்குடியிருப்பு நிறைந்த உணவினையுடைய செவ்விய சாலாக உழுகின்ற உழவர்கள் உழவுத் தொழிலை நன்கு நடைபயின்ற பெரிய எருதுகளை வீட்டின் வாயிலிலேயே நுகத்திற் பூட்டிக் கொண்டு சென்று பிடியானையின் வாயை ஒத்த வளைந்த கலப்பையைக் கொண்டு உழுது விதைத்தனர். அதன் பின்பு பறக்கலாற்றாத இளங்குஞ்சுகளையும், கூட்டிக் கொண்டு குரியகாலையும் கரிய கழுத்தையும் உடைய குறும்பூழ் காட்டிடத்தே தங்குவதற்குக் காரணமான வன்னிலத்தைக் கடந்தனர் என்பதைப் பெரும்பாணாற்றுப்படை பாடலடிகள் (203 -206) உணர்த்துகின்றன.

## விளைநிலம்

காற்று வலமாகச் சுழலவும், அகன்ற நாள் மீன்கள் நன்னெறிக்கட் செல்லவும், பகற் பொழுதினை உண்டாக்கும் ஞாயிற்று மண்டிலமும், முகில்கள் வேண்டியாங்கு பொய்யா நிற்பவும், திசைகளெல்லாம் தழைப்பவும், ஒரு விதைப்பின் கண் வித்திய விதை ஆயிரமாக விளையவும் விளை நிலங்கள் தழைப்பவும் என பாண்டிய நாட்டு மன்னனது செழிப்பைக் கூறும் போது விளைநிலம் குறித்த கருத்துக்களை மதுரைக் காஞ்சி பாடலடிகள் (230-234) உணர்த்துகின்றன.

தொல்காப்பியர் நிலத்தை ஐந்து வகையாகப் பிரித்து நிலநூலுக்கு அறிமுகம் தந்துள்ளது போலப் பத்துப்பாட்டில் நிலப்பாகுபாடு முறை இருந்தது எடுத்துரைக்கப்படுகின்றது. அத்துடன் ஐவகை நிலங்களின் தன்மையைப் புலப்படுத்துவதுடன் ஏனைய பிற நிலங்களாக விளங்கிய கொல்லை நிலம், கரம்பு நிலம், விளை நிலம், வன்னிலம் குறித்த கருத்துக்களையும் புலப்படுத்துகின்றன.

# கண்ணதாசனின் பாடல்களில் பெண்

*ந. ராஜகுமார்*
அண்ணாமலை நகர்

## முன்னுரை

கவிஞர் கண்ணதாசனின் பெயரை கேட்ட உடனேயே தமிழுக்கு வளம் சேர்த்த அவருடைய தேன்மதுர திசையிசைப்பாடல்தான் நினைவுக்கு வரும். கவிஞர் கண்ணதாசனின் திசையிசைப் பாடல்களின் புலமைத்திறத்தில் ஈடுபட்ட ஆர்வலர்களின் நூல்களின் இருப்பிடம், கவியரசரின் திரைப்பாடல்களிடையே இலங்கும் பெண்ணிய சிந்தனைகளைத் தொகுத்து பார்ப்பதே இதன் நோக்கம்.

காலைப்பொழுது என்று கூறுவதைக் கவிஞர் விடிந்தும் விடியாததும் போலத் தோன்றுகின்ற காலைப் பொழுது என்கின்றார். அக் காலைப்பொழுதில் அன்னத்தைப் போல அறிதுயில் கொள்வதைப் பாடுகிறார்.

தென்றல் நதியிலும், கொடியிலும் தவழ்ந்து வருவது உலகியல்பு. கவிஞரவர்கள் தென்றலைப் பெண்ணாக்கி அது நதியில் விளையாடிவிட்டுக் கொடியில் தலைசீவி மெல்ல நடந்து வருவதாகக் கற்பனை செய்கிறார்.

முதலில் மலரையும், பின்னர் காலைப் பொழுதையும் அடுத்து நதியில் விளையாடிவரும் தென்றலையும் கூறுகிறார். இவற்றைப் பெண்ணின் செயல்களோடு மனதில் நிறுத்திப் பாடியுள்ள கவிஞரின் கற்பனையாற்றலை உணர முடிகிறது.

ஒரு பாடல் கருத்து வளத்தால் மட்டும் சிறப்படைவதில்லை. கூறும் முறையும் அழகும் அமைப்புடையதாகப் பாடல் இருக்க வேண்டும். கண்ணதாசன் வாழ்வியல் அனுபவங்களை எல்லாம் பாடலாகப் புனைந்து தந்தவர். இவர் நமது உத்திகளாகப் பலவற்றைக் கையாண்டு பாடல் புனைந்துள்ளார். பிற இலக்கியங்களின் வரிகளைத் தனதாக்கிக் கொண்டு

உவமை, உருவகம், சீரமைப்பு ஆகியவற்றைத் தமது உத்திகளாக்கியும் அவர் பாடல் யாத்துள்ளார்.

## பெண், அழகின் சிகரம்

கவிஞர் பெண் அழகின் சிகரம். பெண்களின் கண்ணழகு, பெண்ணின் கூந்தலழகு, பெண்ணின் இடையழகு, திருமணம், கற்பின் மகிமை, தாய்மை போன்ற உட்தலைப்புகளில் பெண்மையின் அழகு பிரமிக்க வைப்பது பெண்ணில் அழகில்லாத பகுதிகள் இல்லை. அடிமுதல் நுனிவரை இனிக்கும் செங்கரும்பு போன்றது பெண்மை மொத்தத்தின் பெண் அழகின் சிகரம் என்ற சிந்தனை என்று கூறப்படுகிறது.

பெண் என்பவள் மென்மையானவளாகவும், அடக்கம் உடையவளாகவும் இருக்க வேண்டும் என்ற சிந்தனை அவள் மனதில் விதைக்கப்படுகிறது.

ஆண் என்பவன் பகுத்தறிதல், வலிமை, வீரம், சிந்தனைத்திறன், படைப்பாற்றல் எனப் பல உடையவன். பெண், அமைதி, அறியாமை, கற்பு போன்ற வேறுபட்ட குணங்களை உடையவள். அதனால் அவள் எப்போதும் கணவனோடு அவன் எப்படிப்பட்டவனாயினும் இணங்கி நடப்பவளாக இருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது.

## கவிஞர் பெண்ணைப்பற்றிக் கூறுவது

கவிஞர் பெண்ணின் பார்வை பலவகையான நுட்பங்களைக் கூறக் கூடியது. உள்ளே ஏற்படும் உணர்வுகளை விளக்குவது. கண் அசைவில் தன் எண்ணத்தை நிறைவேற்றும் திறன் மிக்கது. இது பெண்ணுக்கு மட்டும் இறைவன் கொடுத்த தனிச்சிறப்பு என்பதைக் கவியரசர் ஆயிரமாயிரம் ஆசைகள் உள்ளதாலும் அவை அனைத்தையும் உள்ளடக்கி எண்ணங்களைச் சிதறவிடாமல் பார்வையைக் கூட பக்குவப்படுத்திப் பதனமாக வாழ்வது பெண்ணின் இயல்பு என்பதைக் கவிஞர்,

*“உன்னை நான் பார்க்கும் போது*
*மண்ணை நீ பார்கின்றாயே*
*விண்ணை நான் பார்க்கும் போது*
*என்னை நீ பார்க்கின்றாயே”*

என்று கூறுகிறார்.

கவியரசர் ஆடும் விழிகளின் அபிநயம் அது கூறும் மொழிகள் ஒரு பெண் எந்தப் பள்ளியிலும் எந்தக் கல்லூரியிலும் படிக்காத ஒன்று. இது எப்படி இவளுக்கு வந்தது? யார் கற்றுக் கொடுத்தது? இளமையின் நன்கொடையா? அல்லது இயற்கையின் அதிசயமா? இத்திகைப்பைக் கவிஞர் தன் பாடல் வரிகளில்,

*''நாடகமெல்லாம் கண்டேன் - உந்தன்*
*ஆடும் விழியிலே*
*ஆடும் விழியிலே - கீதம்*
*பாடும் மொழியிலே''*

என்று கூறுகிறார்.

ஊடலும், கூடலும் காதலில் இன்பம். அதை அதிகம் உணர்ந்தவர்கள் பெண்கள். ஊடலைத் தொடங்குபவர்கள். அதை இயக்குபவர்கள். சுவைப்பவர்கள். நுகர்பவர்கள் பெண்கள் என்பதைக் கவிஞர்,

*''ஊடல் பெண்ணின் பாடல்*
*கண்கள் காதல் வாசல்*
*பூப்போன்ற பெண்மை ஒரு நாடகமேடை*
*பொல்லாத கண்களிலே ஆயிரம் ஜாடை''*

என்று குறிப்பிடுகிறார்.

ஒரு பெண் அழகி என்றால் அந்த அழகுக்கு இலக்கணம் இதுதான் என்கிறார் கவியரசர்

*''பாவை உன் முகத்தைக் கண்டேன்*
*தாமரை மலரைக் கண்டேன்*
*கோவைபோல இதழைக் கண்டேன்*
*குங்குமச் சிமிழைக் கண்டேன்''*

## பெண்ணின் இடையழகு

அசைந்து அசைந்து அடி அடியாய் எடுத்து, வளைந்து குழைந்து இடையே இல்லாதது போல் நடக்கும் கலை பெண்ணுக்கு உரித்தானது என்பதைக் கவிஞர்,

"அன்ன வாகனம் - போல அடிஅடி
வருவது தான் பெண்ணின் சீதனம்

என்றும்,

'நாணலிடம் காலெடுத்து
நடந்து வந்த பெண்மை இது
நாணம் எனும் தென்றலிலே
தொட்டில் கட்டும் மென்மை இது

என்றும் கவியரவர் வர்ணிக்கின்றார்.

## ஆணாதிக்கத்தில் பெண்

சங்க காலமும் பெண்ணுக்கு பொற்காலமாக இருந்ததில்லை. ஆண், பெண் ஒத்த உரிமை என்பது ஒன்றுமில்லை. பெண் ஆணைச் சார்ந்தே வாழ்ந்துள்ளாள். அதனால் ஆண் உயர்ந்தவனாகக் காணப்பட்டான். அவனே குடும்பத் தலைவனாகவும் இருந்தான். பொருள் தேடச் செல்பவனும் போருக்குச் செல்பவனும் ஆணாகவே இருந்தான். கட்டுப்படுத்தும் ஆற்றல் ஆணிடமிருந்தது. கட்டுப்பாடு என்பதும் இன்றியமையாத ஒன்றாகவே இருந்தது. இத்தகைய போக்கு நாளடைவில் அவனை ஆதிக்கமிக்கவனாக மாறச் செய்து அத்தகைய ஆதிக்கம் காலப்போக்கில் எல்லை மீறிப் போய் பெண் உரிமைகள் யாவும் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டன. அதனால் பெண் அடிமையாகக் கருதப்பட்டாள்.

பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் கூடத் துணை அவசியமாகிறது. பெண்ணுக்கு ஒரு ஆண் துணை தேவைப்படுகிறது என்கிறார் கவியரசர்.

பெண்ணாகப் பிறந்தால் - ஒரு
புருஷனுக்கு நேரே
நின்னாகத்தான் வேணும் - அவள்
வாழ்வில் ஒரு நாளே -

பெண் என்பவள் பெண்மையானவளாகவும் அடக்கம் உடையவளாகவும் இருக்க வேண்டும் என்று அவளது பிஞ்சு வயதிலேயே அவள் மனதில் விதைக்கப்படுகிறது.

ஆண் என்பவன் பகுத்தறிதல், வலிமை, வீரம், சிந்தனை திறன் மற்றும் படைப்பாற்றல் எனப் பல திறமை படைத்தவன். ஆனால்

பெண்ணோ மென்மை, அமைதி, அறியாமை, கற்பு போன்ற வேறுபட்ட குணங்களை உடையவள். அதனால் எப்படிப் பட்டவளாயினும் இணங்கி நடப்பவளாக இருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது.

ஆண்கள் ஆணாதிக்கச் சிந்தனை அற்றவர்களாக, பெண்ணின் உணர்ச்சிகளை மதிப்பவர்களாக, பெண்ணைத் தன்னோடு சமமாகக் கருதுபவர்களாக மாறும் வரை சமுதாயம் முழு வளர்ச்சி பெறாது.

## அறிவுரை

வயதில் முதிர்ந்தவர்கள் தன் பட்டறிவில் அறிந்தவரைப் பிறருக்கு உணர்த்துவதும், தவறுகள் செய்து அதனால் தட்டுத் தடுமாறி திருந்தியவர்கள் பிறருக்கு எடுத்துக் கூறுவதும், கல்வி அறிவாலும் பட்டறிவாலும் தான் அறிந்தவற்றை அடுத்தவர்களுக்கு எடுத்துரைப்பது அறிவுரையாகும். கவியரசர் கண்ணதாசனும் எப்படியெல்லாம் வாழக்கூடாதோ அப்படியெல்லாம் வாழ்ந்திருக்கிறேன். ஆகவே இப்படித்தான் வாழ வேண்டும் என்று புத்தி சொல்லக்கூடிய யோக்கியதை எனக்கு உண்டு என்கிறார்.

அறிவுரை என்பது கூறுவதற்கு எளிது பின்பற்றுவது கடினம். ஏற்றுக்கொள்ளாதவர்களிடம் அறிவுரை கூறுவது விழலுக்கு இறைத்த நீராகும்.

## முடிவுரை

எனவேதான் கவியரசர் பெண்ணுக்கு மட்டும் அரிதுமான அறிவுரைகளை அள்ளித் தெளிக்கின்றார். பட்டும் கெட்டும் திருந்துபவர்கள்தான் ஆண்கள் என்பது கவியரசரின் உள் மனதில் ஒளிந்திருக்கும் கருத்தாகின்றது.

# குடும்ப விளக்கில் கொஞ்சும் உவமைகள்

*புலவர் சி. பாண்டுரங்கன்*
ஆம்பூர்

## பொன்விடியல்

'குடும்ப விளக்கில்' உவமைகள் கொட்டிக்கிடக்கின்றன. பொன்விடியலைப் பாரதிதாசனார் பாடிய அழகே அழகு ! கேள்வியறிவால் அகலும் அறியாமை போல், கொஞ்சம் கொஞ்சமாக இருள் இறுக்கம் குறைகிறது! நீலக்கலவையில் சுண்ணாம்பு கலக்கும் நிகழ்வைப் போல், காலைக் கதிரொளி, வானத்தில் வெளிச்ச பவனிக்குக் கட்டியம் கூறுகிறது. பொழுது மலரப் போகிறது ! (எறும்புகளை ஓம்பும்) அரிசிமாக் கோலம் அமைத்த குடும்பத் தலைவியின் கருணையைப் பாராட்டிப் பரிசில் நல்குவது போலப் பகலவன் பொன்னொளி கொடுத்தான்.

*'இளங்கதிர் கிழக்கில் இன்னும் எழவில்லை,*
*இரவு போர்த்த இருள்நீங்க வில்லை*
*ஆயினும் கேள்வியால் அகலும் மடமைபோல்,*
*நள்ளிரவு மெதுவாய் நடந்துகொண் டிருந்தது.*
*தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த*
*கலப்பென இருள்தன் கட்டுக் குலைந்தது.*
*புலர்ந்திடப் போகும் பொழுது.....*
*அரிசிமாக் கோலம் அமைத்தனள்; அவளுக்குப்*
*பரிசில் நீட்டினான் பகலவன் பொன்னொளி !'*

## தேன் பலா

பலாச்சுளை வரிகளில், உவமைத்தேன் கலந்து, சுவையின் உச்சத்தைப் பாவில் வைத்தார்; எளிய சொற்களும் ஆழமான பொருள் உணர்த்தும் கவிதை வரிகளும் சேர்ந்து, பாலாற்றங்கரை மணற்கேணியின் ஆழ்தரை காட்டும் நீரின் தெளிவையும், நெடிய நீர் ஆழத்தையும், வாசகரின் மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்துகின்றன!

## உவமை வரிசை

காட்சி, கவிதையாகும் போதே, உவமைகள் நான்முந்தி, நீமுந்தி எனத் துள்ளிவந்து தள்ளித் தவித்துப் பணிசெய்யும் :

*'சின்ன மூக்குத் திருகொடு தொங்கும்*
*பொன்னாற் செய்த பொடிமுத் தைப்போல்*
*துளிஒளி விளக்கின் தூண்டு கோலைச்*
*செங்காந் தள்நிகர் மங்கை விரலால்*
*பெரிது செய்து விரிமலர்க் கையில்*
*ஏந்தி, அன்னம் வாய்ந்த நடையொடு....'*

வெண்டையை உரித்தால் முத்துகள் வரிசைபோல் நிற்கும் உவமைகள் :

*'புன்னை இலைபோல் புதையடிச் செருப்புகள்....'*
*வண்டியில் வந்த பொருள்மேல் பயணித்த மாமி*
*கூறுதல் : ........'இவைகளின் உச்சி மீதில்,*
*குன்றுமேல் குரங்கு போல*
*என்றனைக் குந்த வைத்தார் !*
*என்தலை நிமிர வண்டி*
*மூடிமேல் பொத்த விட்டார்;*
*உன்மாமன் நடந்து வந்தார்;*
*ஊரெல்லாம் சிரித்தது என்றாள் !''*

## மாதுளை

*'குவிப்புடைய விற்கோல்போல் புதவ்எடுத்த*
*கோடெல்லாம் பூவும் பிஞ்சும்*
*உவப்படையச் செய்கின்ற மாதுளை.....'*

## மா :

*'மாணிக்க மாம்ப ழந்தான் மரக தத்தின்*
*இலைக்காம்பில் ஊஞ்ச லாடச்*

சேண்எட்டு கோலெடுத்தேன் கைப்பிடித்தேன்
வாய்வைத்தேன் தேன் தேன் தேனே !''

**பாண்டியன்**

'செந்தமிழ்ப்
பாண்டிய மன்னன் மீண்டது போல
உடுத்திய உடையும் எடுத்த மார்பும்
படைத்த கணவனைப் பார்த்துக் கிடந்தாள்.....?

'தணல்நிற மாம்ப ழத்தில்
தமிழ்நிகர் சுவையைக் கண்டாள்.....?
'இணையற்ற அவன் அன்புக்கு
நிகராமோ இவைகள் என்றாள்....?

**வஞ்சி**

'எடுத்தடிவைப் பாள்இடையோ அசையும் வஞ்சி
இன்பக்க ளஞ்சியம்நல் லழகின் வெற்றி
பொழிகதிரை மறைத்தொளிகொள் முகிலைப் போலப்
புனைஆடை பொன்னொளியைப் பெற்ற தென்றால்
அழகுடையாள் திருமேனி என்னே என்னே !
பனங்கற்கண்டிலும் பாவேந்தர் பாடலிலும் எந்தப் பகுதி
சுவை அதிகம்?

**பா விரவிய உவமைகள்**

'வானில் விரவிய விண்மீன்போல் பாவேந்தர்
பாவிர வும்உவமை பார்!''

# தனித்தமிழ் இலக்கணம் நூறடிப்பா

முனைவர் அரசக்கண்ணன், தஞ்சாவூர்

தொல்காப்பியமென்பதோ இலக்கண நூலாம்
தூயதமிழ் இக்காப்பியமும்அது போலாகும்
இனிதான செந்தமிழில் பிறமொழி கலவாது
தனித்தியங்கத் தொகுத்ததாம் தனித்தமிழ் இலக்கணம்! 1

ஒருமொழி தன்னில் பிமொழிக் கலப்பு
வருவழி முதன்மொழி காத்தல் கடமையாம்
வடமொழியே முதலில் தமிழோடு கலந்ததாம்
வடமொழி களைந்திடக் கண்டார் விதிகளே! 2

வடசொல் வருவழி வருமிடத்து
வடசொல் எழுத்தை நீக்கிடத்தமிழ்
எழுத்தொடு சொல்லாகும்மே என்றும்,
வருவனவற்றுள் சிதைந்தன வரினும்
பொருந்துவனவற்றைப் போக்கார் என்றும்
நுவலும்தொல் காப்பிய நூற்பாக்கள் முறையே,
''வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே''
''சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்''
என்பன முதலில் தோன்றிய வரைவுகளே! 3

இன்ன வடவொலி வருமேல் அதற்கு
இன்ன தமிழொலி வரவேண்டும் என்று

அடுத்து வந்தவீ ரசோழிய இலக்கணமே
தொடுத்து விதிகளைத் தொகுத்துக் கொடுத்தது. 4

வடமொழிச் சொற்கள் தமிழாகும் போது
எதிர்மறையில் நவிகுதி ஏற்கும் என்றும்
மொழிமுதல் ஏகார ஓகாரங் களிரெண்டும்
ஐகார ஔகாரங் களாக வருமென்பார். 5

இகரத் திற்கு ஐகாரமும் வருகின்ற
உகரத் திற்கு ஔகாரம் எனவும்
இருவென்ப தற்கு ஆரென் பதும்வரல்
விருத்தி எனவே ஒலிவிதி உரைப்பார்! 6

உகரத் திற்கு ஓவும் வருகின்ற
இகரத் திற்கு ஏயும் வருமாம்
இதனைக் குணசந்தி என்று குறிப்பார் 7

யகர முதலின் முன்னர் இகரமும்
லகரத் திற்கு இகரமுடன் உகரமும்
ரகரத் திற்கு அ.இ.உ. வருமென்பார். 8

சமற்கிருத எழுத்து ஷவரின் தமிழில்
ககரம் இரட்டித்து ஷ எழுத்து அழியும்.
முன்னும் பின்னும் தனித்துவரின் டகார
மாகும், அயலெ ழுத்து சஆகும்.
முப்பத்தி ரெண்டாம் எழுத்துத் தவ்வாம்
முப்பத்தி மூன்று கெடுமெனக் கூறி
அல்யது யகரமும் ககரமு மாகும்.
யரல தோன்று மிடத்துத் தமிழில்
இகரம் இடையே வருமென்ப தோடு
வகர மாயின் உகரம் வருமென்பார். 9

*வடசொற்கள் தமிழாகும் போது தமிழொலியே*
*வந்திடத் 'தமிழல் லனபோம்' என்பார்*
*இந்நிலை வடசொற்க ளுக்கு மட்டுமின்றி*
*அந்நியச் சொற்கள் யாவுக்கும் என்பார்.* 10

*செய்யுள் ஈட்டச் சொல்லாக வடசொல்லைச்*
*சொல்லிடும் தொல்காப் பியமெனில் மறுத்து*
*வாரா திருத்தலே சொற்குற்றம் அற்றதாம்*
*வருமெனில் பழித்த உறுப்பெனவும் பழிப்பார்.*
*இயைவன வடசொல் எனமுடியும் நன்னூல்*
*இருவகையாய் தற்சமம் தற்பவம் எனக்கூறும்*
*அமலம், காரணம், குங்குமம் தற்சமம்*
*எனவும், சுகி, போகி தற்பவம் எனவும்*
*உரையா சிரியர் எடுத்துக் காட்டுவார்.*
*பிரயோக விவேகமும் அவ்வாறே கூறி*
*தீர்க்க சந்தி என்பதையும் சேர்க்கும்*
*சேநா திபதிஎனக் காட்டாய் மொழிப.* 12

*சிலவொலிகள் தமிழோடு இணைந்து வாரா*
*உயிரொலிகள் மொழிமுதல் யிடைகடை ஏற்கும்*
*ஒலிமாற்றம் தமிழுக்கு ஏற்றதாய் ஏற்பட*
*ஒலிபெயர்ப்பு என்றே இதனை உரைப்பார்.* 13

*தொல்காப் பியம்வீர சோழியம் மற்றும்*
*தொடரும் நன்னூல் பிரயோக விவேகம்*
*எல்லாம் வடவெழுத்தை நீக்கி ஆண்டுதமிழ்*
*எழுத்தால் எழுதுக என்றும், வருகின்ற*
*வடவெழுத் திற்கு இன்னின்ன வாம்தமிழ்*
*எழுத்துக்கள் எனவும் கூறினவே யன்றி,*
*வடசொல்லை நீக்கி ஆண்டு தமிழ்ச்சொல்*

வருமாறு விதிகளை ஆக்க வில்லை
தமிழ்வடிவில் இதனால் வடமொழிச் சொற்கள்
தழைத்திட, நிலைபேறு எய்திட வாய்த்தவே ! 14

இயற்பெயர் சிறப்புப் பெயர்களைத் தமிழொலியால்
பெயர்த்தல் வேண்டும் என்பார் பாவாணர். 15

பரிபாடல் சமாதியை நொசிப்பு என்றும்,
பிரத்யும்நன் பெயரைப்பொன் கண்பச்சை எனவழங்கும்
கம்பர் ரத்தாக்சன் எனும்பெயரைக் குருதியின்
கண்ணன் என்று தனித்தமிழ் ஆக்கினார். 16

ஜோசப் பெஸ்கி வீரமா முனிவராகி
ஜோசப் எனும்பெயரை வளன்என ஆக்கினார்
ஆகாச வாணி என்ற வடசொல்லை
வானொலி யாக்கித் தனித்தமிழ் கண்டுள்ளார்.
சங்க காலம்முதல் இக்காலம் வரையில்
எங்கும் தனித்தமிழ்ப் பெயர்கள்தாம் உளவே!

பிறமொழிப் பெயர்களை மொழிபெ யர்த்தும்
பெயர்சொற் களைத்தமி ழாக்கமும் செய்துள்ளார்
அயன்மொழிப் பெயர்களுக்கு தமிழ்ப்பெ யர்கள்
பயன்படவே தனித்தமிழில் ஆக்கி யுள்ளார். 17

வடசொல் லாயினும் பிறசொல் லாயினும்
வருமேல் தமிழிற்கு வந்திடும் கேடே
தமிழிற்கு பிறசொற்கள் தேவை யன்றாம்
தனித்தியங் குந்தன்மை தமிழிற்கே உண்டாம்! 18

அயற்சொற் கிளவி வருமேல் அதனைக்
கருச்சொற் கிளவியால் களைக அதுமேல்!
தமிழ்மயமாய் வருமெனில் சொல்லை நீக்குக
தனித்தமிழாய் அவ்விடத்தே சொல்லை ஆக்குக! 19

# பேராசிரியர் ம.ரா.போ. குருசாமியின் குருமுகம்

*பேராசிரியர் முனைவர் து. மூர்த்தி*
அலிகர் முஸ்லீம் பல்கலைக்கழகம்

சாதி, மதம், அரசியல் செல்வாக்கு, அதிகார பலம், பதவி மேட்டிமை, பணம் என்ற வெறிகளுக்கு ஆட்படாமல் 'தெள்ளியர்' ஆகி, அறிவு விலை பேசும் ஆசிரிய வணிகர் ஆகாமல், 'ஒழுக்கம் முதற்றே ஆசிரியன் கொற்றம்' என்பதற்குச் சான்றாக 'இன்றும்' நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் பெருமகனார் பேராசிரியர் ம.ரா.போ.குருசாமி அவர்களைப் பற்றி எழுத வாய்த்தது என் நற்பேறாகும்! 2010 அக்டோபர் மாதத்தில் ஓர் நாள் அவரைப் பார்ப்பதற்காக, கோவை மாநகரில் அவர்தம் இல்லம் நாடிச் சென்றேன். எப்படி அவரிடம் என்னை அறிமுகப்படுத்திக் கொள்வது என்பதைப் பற்றி எனக்குள் ஒரு விவாதம். 'விருந்தும் எதிர்விருந்தும்' மட்டுமே உறவின் வண்ணங்களாகிவிட்ட வணிகத் தமிழகத்தில், அறிவு நலன் மட்டுமே தேடித் திரியும் கமலேஸ்வரன் அவர்கள் முன்கூட்டியே தொலைபேசியில் என் வருகையைப் பற்றிக் கூறியிருந்தார். தேவைப்பட்டால் பேராசிரியர் தி.வ.மெய்கண்டாருக்கு வேண்டியவன் எனச் சொல்லிக் கொள்ளலாம் என ஓர் அனுமதி! அவருக்கு வேண்டியவர்கள் யாரெல்லாம் எனக்கும் வேண்டியவர்கள் என மனதில் எண்ணிக் கொண்டே அவர் வீட்டுக்குள் நுழைந்தேன்!

"வாங்க, உள்ளே வந்து உட்காருங்க !' - நெடுநாள் நேசம் கொண்ட, மனங்கவர் மாணவனை வரவேற்பது போல் அன்பின்குரல் ! 'பெரியோரை வியத்தலும் இலமே; சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே என்ற தமிழர் அறம் காக்கும் குருசாமியின் அறிவு அமுதம் பெற்றேன் ! ஏறக்குறைய இரண்டரை மணிநேரம் செவிவாயாகப் பசியாறினேன்! வழக்கமாக நான் 'அதிகம்' பேசுபவன். இதனால் என் மனதில் சுட்ட வடுக்களின் மொத்த நீளம் 2400 கிலோ மீட்டர் ஆகும். அதாவது தஞ்சாவூரிலிருந்து அலிகர் வரை உள்ள தொலைவு ஆகும்.

பேரா.மு.வ., திரு.வி.க., வி.ச.காண்டேகர், பெரியார், வள்ளுவர், பாரதி, பாரதிதாசன், பாவாணர் ஆகியோர் எங்கள் குடும்ப மூத்தோர்கள் ! கல்லூரி கடந்த பின் அதாவது 'காலம் கடந்து' தெ.பொ.மீ. அவர்களைப் படித்திருந்தேன். வறட்டு நாத்திகத்தால் 'பெரியாரைப் பிழைத்தே' பெருமக்களான ஓர் அவலம் அது. மேடைப் பேச்சையே அறிவின் எல்லையாக

அகம்பாவித்துக் கொண்டிருந்த மூன்றாவது தலைமுறையின் கடைசி துளிர் நான்! வள்ளலார், கட்டபொம்மன், ஔவையார், இளங்கோவடிகள், வ.உ.சி., பாரதி என்ற பெருமக்களைத் தூக்கி நிறுத்திய ம.பொ.சியை அறிந்துகொள்ளக் கூட முயலாத காலம்! 'அறிவைப் பெற குறுக்கு வழி எதுவுமே இல்லை; உழைத்தே தீர வேண்டும்' என்ற லெனினின் தோழமையால் மார்க்ஸ் என்ற மாபெரும் மலையின் அடிவாரத்தில் நடக்கத் தொடங்கியிருந்த போதுதான் 'பசியும் அறிவும்' என்றால் என்ன என்ற விடைதேடத் தொடங்கினேன். அந்தத் தேடலின் ஒரு பகுதியாகவே அறிவு நலம் சார்ந்த பெரியோர்களைத் தேடித் தேடிப் பார்த்தேன், படித்தேன். பேரா.குருசாமி அவர்கள் தமிழ்நாட்டின் இருபதாம் நூற்றாண்டு வரலாற்றைத் தொட்டுக்காட்டிச் சென்றார்; தொடுதல் என்றால் தோண்டுதல் என்றும் பொருள்! அவரது பேச்சு என் நெஞ்சைத் தெட்டுப் பதிய வைத்த விதைகள் ஏராளம்!

முகங்களே முகமூடிகளாகிப் போன தமிழறிஞர் உலகம் பற்றிய என் மனத்திரை மேலும் மேலும் நொந்தது. ஆனால் ஏற்கனவே எனக்கு நூல்களால் பழக்கமாகியிருந்த, மேலே நான் குறிப்பிட்டிருக்கும், தமிழ்ப் பெருமக்களைப் பற்றி அவர் கூறிய நற்செய்திகளால், இதயம் நிறைந்தேன்!

வாழ்க்கையில் ஒழுக்கத்தோடும் பொதுப்பணி செய்தும் வாழவேண்டும் என்ற உணர்ச்சியைப் பள்ளிப்பருவத்தில் எங்கள் மனதில் இட்டவர் திரு.வி.க.! இலட்சிய வேட்கையைத் தூண்டியவை மு.வ.வின் நாவல்கள். பேரா.குருசாமியோ மு.வ.வின் முதலணி மாணவர் நால்வருள் ஒருவர்; தமிழ் முனிவர் திரு.வி.க.வைப் பல ஆண்டுகள் ஞாயிறுதோறும் பார்த்துப் பழகிச் செழித்தவர்! கேட்கவா வேண்டும்?

காவிய மனங்களை நாவல் (புதுமை) மனங்களாக மாற்றி அமைத்த மு.வ.வின் வகுப்பறை வாழ்வைப் பற்றிக் கூறினார். தான் எதிர்பார்த்த விடையை - விளக்கத்தை எழுதாவிட்டாலும் பொருத்தமான - புதிய - விளக்கத்தை எழுதிய குருசாமியைக் 'குட்டி' நோக வைக்காமல், தட்டிக் கொடுத்த அதே மு.வ. தான் 'பல்கலைக் கழகத் தேர்வில் பரிமேலழகரை மட்டும் எழுது' என அறிவுரை கூறியிருக்கிறார். மாணவன் முதல் வகுப்பில் தேற வேண்டும்; தேறிய பின் அவனுக்கு வேலை கிடைக்க வேண்டும் என்று மு.வ. எடுத்துக் கொண்ட அக்கரை பற்றிக் கேட்டபோது மனம் மகிழ்ந்ததா கலங்கியதா என எனக்குத் தெரியவில்லை! மாணவன் வேலையில் சேர்ந்த கொஞ்ச நாள்களிலேயே, 'சொந்தமாக வீடு கட்டு' என நச்சரித்துள்ளார்; தேவைப்பட்டால் பணமும் கொடுத்திருக்கிறார். காண்டேகத்தால் அதிர்ந்து போயிருந்த எங்கள் பள்ளி மனம் மு.வ. வால் மென்மை கண்டது; தமிழ் ஞானப் பெருங்கடலாம் திரு.வி.க.வால் எளிமையும் பணிசெயும் துணிவும் கொண்டது. பேராசிரியரோ காண்டேகர், மு.வ., திரு.வி.க. என்ற தமிழ்க்கடல் சங்கமத்தால் என்னை மூழ்கடித்தார்.

திரு.வி.க.வின் மரண ஊர்வலத்தில் - சென்னை இராயபுரத்தில் இருந்து திருவல்லிக்கேணி வரை - ரப்பர் குழாயமைந்த வாளியைச் சிறுவன் ஒருவன் சுமந்து வர நடந்தே வந்த பெரியாரைப் பற்றி ஐயா குருசாமி விவரித்தபோது திரு.வி.க.வின் பிரமாண்டம் எனக்குப் புரிந்தது. 'வளம் வாய்ந்த மாமலை எளிமையானது' என்றால், இந்தத் தொடரை எப்படி மனசுக்குள் காட்சிப்படுத்த முடியவில்லையோ அப்படித்தான் திரு.வி.க.பற்றி பேரா. குருசாமி கூறிய செய்திகளை என்னால் காட்சிப்படுத்த முடியவில்லை; திணறிப்போனேன்.

எங்கள் உரையாடலில் - இல்லை பேரா.குருசாமி பேச்சிலும் என் செவியாடலிலும் அதிகம் நிறைந்திருந்தது திரு.வி.க., மா.பொ.சி. மற்றும் பெரியார்தான். தமிழ் ஞானத்தாலும் ஒழுக்கத்தாலும் வரலாற்று அறிவு முதிர்ச்சியாலும் உயர்ந்து நின்ற, 89 அகவை நிறைந்த ஐயா குருசாமி அவர்கள் என்னுடைய 'சின்னஞ்சிறு' விளக்கங்களையும் மதித்துக் கேட்டார்; கூர்மையாகக் கேட்டார் ! 'சீ....சீ... சிறியவனே' என்ற விடைகளுக்கே பழகிப் போன என் மாணவ மனம் அஞ்சியது. ஆனால் அலட்சியப் படுத்தாமல் என்னைப் பேச விட்டார். என் விளக்கங்கள் சிலவற்றை வினாவாக ஏற்று விரிவாகப் பொறுமையாக விடையளித்தார். என் 'திராவிட மனம்' கலங்கியது !

"ஈட்டியை ஈட்டி என்றே கூறு. மயிலிறகு எனக் கூறாதே" என்பது பகுத்தறிவால் நான் பெற்ற தெளிவு. அந்தத் தெளிவால் தந்தை பெரியாரையும் பார்க்க நான் துணிந்திருந்தேன்; பேரா. குருசாமியின் பேச்சு அந்தத் தெளிவை - துணிவை - வலிமையாக்கியது. விடுதலை பெறவிருக்கும் இந்தியாவில் மையத்திலும் மாநிலத்திலும் பதவிகள் பெற வாய்ப்பிருந்தும், 1946இல் காங்கிரசை 'விட்டு விலகி நின்று', தமிழ், தமிழன், தமிழ்நாடு என்ற முப்பரிமாண வெற்றிக்காக, மையத்தில் கூட்டாட்சி, மாநிலத்தில் தன்னாட்சி என்ற அரசியல் கொள்கைக்காக களங்கண்ட ம.பொ.சி.யின் வாழ்க்கை பற்றிப் பேராசிரியர் குருசாமியின் வாயால் கேட்டபோது எனக்கு ஏற்பட்ட மன உணர்ச்சிகளை என்னால் சொற்களால் வடிக்க முடியாது; அந்தக் கொந்தளிப்பு இன்னும் வடியவே இல்லை ! இந்தியாவின் அரசியல் சமூக வாழ்வைப் புரிந்து கொள்ள, புலே, அம்பேட்கர், காந்தி, பெரியார் ஆகியோரை முறையாகப் படிக்க வேண்டும் எனக் கருதுபவன் நான்; அலிகர் வாழ்க்கை அறிவால் சர் சையது அகமது கானை அறிந்தேன். பேரா. குருசாமியிடம் பேசிய பிறகு ம.பொ.சி.யைப் படிக்காத தமிழனின் அரசியல் அறிவு மூக்கும் கண்ணுமற்ற மண்சிலை எனப் புரிந்து கொண்டேன்; படிக்கிறேன் ! மார்க்சியம், காந்தியம், பெரியாரியம் என அனைத்தும் வறட்டுச் சூத்திர அறிவாகக் கற்பிக்கப்பட்டுவரும் தமிழகத்தில், வாழ்க்கைச் சூட்டால், அனுபவ நெருப்பால், தமிழன் நேயத்தால் புடம் போடப்பட்ட மா.பொ.சி.யின் அறிவுத் தெளிவு புறந்தள்ளப்பட்டது வாய்ப்புக்குரியதில்லை ! மேதை அம்பேட்கர், அரசியலறிவின் எல்லைகளைத் தொட்டார்; கடைசிவரை தேசியம் அவரை

அலட்சியப்படுத்தியது - அவர் சாதியின் காரணமாக ! மனித நேய விடுதலை முழங்கிய பெரியார் அலட்சியப்படுத்தப்பட்டார் - அவரது சாதி ஒழிப்புக் கருத்துகளுக்காக !

சொல்லால் செயலால் - தேசியத்திற்கு உள்ளே இருந்த போதும் - எப்போதும் தமிழனாக வாழ்ந்த ம.பொ.சி. அலட்சியப்படுத்தப்பட்டார் ! *யாரால்? தேசியத்தாராலும் திராவிடத்தாராலும்* ! இது *விபத்தா வேடிக்கையா* வேதனையா? ம.பொ.சி.யின் அரசியல் முழக்கங்களை இன உணர்ச்சியோடு அன்றைய தமிழகமும் தமிழகத் தலைவர்களும் ஆதரித்திருந்தால் நமது வடக்கெல்லை வேங்கடமாக இருந்திருக்கும்; தேவிகுளம், பீர்மேடு, சித்தூர் தமிழ்நாட்டோடு இருந்திருக்கும் - இதுவே 'குருசாமி' தந்த 'தீட்சை' !

''தமிழினமே ஒன்றுபடு' 'வேங்கடத்தை விடமாட்டோம், குமரியைக் கொள்ளை கொடோம்', 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்', 'உரிமைக்கு எல்லை வேங்கடம், உறவுக்கு எல்லை இமயம்', 'மொழிவாரி மாநிலத்தின் சுயநிர்ணயம்' - என்பன போன்ற முழக்கங்களை உருவாக்கியது தமிழரசுக் கழகம் ! குளமாவது மேடாவது - எல்லாம் இந்தியாவில்தான் இருக்கும்; சென்னையை யாரும் தூக்கிப் போய்விட மாட்டார்கள்; இருக்கிற இடத்தில்தான் இருக்கும்; இருசப்ப கிராமணித் தெரு எலும்புக் கூடு; நாலணாவில் காலணா அடக்கம் - என்ற முழக்கங்களும் மற்ற வட்டாரங்களில் இருந்து பிறந்தன. இவை போன்ற முழக்கங்கள் பிறந்த 'கதைகளை' இணைத்துப் பார்த்தால் *ம.பொ.சி.யின் சாதனை வரலாறு தெரியும்*''.

– பேராசிரியர் ம.ரா.போ. குருசாமி எழுதிய 'குருமுகம்' நூல் : பக்கம். 145.

ஆ.....ஆ.... என்ன இது? பேராசிரியர் குருசாமி எனக்கு அன்புடன் கொடுத்த பரிசு, அவர் எழுதிய 'குருமுகம்' என்னும் நூலாகும். பணம் கொடுத்து வாங்கி நூல்களைப் படிக்க வேண்டும் என்பது என் திட சித்தம் ! எனவே, ஆனால் அச்சத்துடன் பணம் நீட்டினேன். ஒரு மென்மையான புன்னகையால் பணத்தை வாங்க மறுத்த அவர், ''முதலில் படியுங்கள்; முடிந்தால் உங்கள் கருத்துகளை எழுதுங்கள்'' என்றார். அந்த நூலைப் பற்றிய விரிவான என் எண்ணங்களை, விமர்சனமாக, திறனாய்வாக எழுத வேண்டும் என்றுதான் இந்தக் கட்டுரையை எழுதத் தொடங்கினேன். ஒரு முன்னுரையாக இருக்கட்டுமே என என்னுடைய சந்திப்பு பற்றி எழுதத் தொடங்கினேன். அது இவ்வளவு பெரிய முன்னுரையாக நீண்டு விடும் என எண்ணவில்லை ! ஆனால், குருமுகத்தின் பேரொளியை என்னால் எழுத முடியுமா? அப்படி முடிந்தால், அது தமிழ்ப் பேராசிரியப் பெருமக்களின் வரலாறாக விரியும். சூரியனைக் குளத்து நீரில் பார்ப்பது போல, குருமுகத்தை இந்தச் சிறு கட்டுரையில் படம் பிடிக்க முயல்கிறேன்.

குருமுகம், தான் உருவாகத் தோள்கொடுத்த, தனக்கொரு முகம் - அடையாளம் உருவாக அறிவு வழங்கிய ஆசிரியர்கள் பற்றிய நூல் !

பேரா. குருசாமியின் சுயவரலாற்றுப் பகுதியும் அவரை உருவாக்கிய குருமார்களின் வாழ்க்கைக் குறிப்புகளுமாம் ! 1940 - 1945 காலப் பகுதியிலான தமிழ் இலக்கிய கல்வி பற்றியதும் கூட ! இருபதாம் நூற்றாண்டில் தமிழும் தேசியமும் இணைந்து வளர்ந்ததும் முரணி நின்றதும் பற்றிய அரசியல் குறிப்புகளும் ஆகும். ஆம் ! இத்தகைய அனைத்துச் சிறப்புகளையும் உடைய இந்த நூல் தகைசால் தமிழ்ப் பேராசிரியப் பெருமக்கள் மோசூர் கந்தசாமி முதலியார், மு. வரதராசனார், அ.ச. ஞானசம்பந்தம், மொ.அ. துரை அரங்கனார், தெ.பொ.மீ, ஆகிய ஐம்பெரும் பேராசிரியப் பெருமக்களைப் பற்றிப் பேசுகிறது / பாடம் புகட்டுகிறது.

அதுமட்டுமா? தமிழ், தமிழர், தொழிலாளர், பெண்விடுதலை ஆகிய அருஞ்சொற்களின் மூலப் பொருளாய் விளங்கிய தமிழ் முனிவர் / தென்றல் திரு.வி.க. பற்றிய அமுத ஊற்றாகத் திகழ்கிறது. இன்று இந்தியா முழுக்கப் பேசப்பட்டுவரும் மாநில சுயாட்சி பற்றி 1946இலேயே அறிவு புகட்டிய நன்னெறிச் செல்வர், ஐயா சிலம்புச் செல்வர் பற்றி ஓவியம் தீட்டுகிறது.

குருசாமி அவர்களின் அன்னை பற்றியும், அன்னையாய் நின்று அண்ணலாய் விளங்கிய அவர்தம் அண்ணன் பற்றியும் கூறும் அன்பின் சங்கமமாய்த் திகழ்கிறது. 179 பக்கத்திற்குள் இயங்கும் குருமுகம் என்ற இந்த நூல், ஆசிரிய - மாணவ - அரசியல் - ஒழுக்க - உறவுகளும் நல்ல மரபுகளும் சீரழிந்து போன இன்றைய தமிழனின் முன்னால் நிறுத்தப்பட்டுள்ள கேள்விக் கணையாகும் : தமிழா, இதுவா நீ?

ஒரு கல்லூரி வாழ்வில் சில காலம் மட்டுமே பாடம் நடத்திய தமிழ் ஆசிரியர்கள் வாழ்ந்து காட்டிய நெறிகள், அவர்களால் உருவான ஒரு ஆசிரியனின் வாழ்க்கையை எப்படியெல்லாம் செழுமைபடுத்தியது என்ற வரலாற்றுக் குறிப்புகள், இன்றைய தமிழகத்தில் படிக்கப் பெற வேண்டிய சொல்வெட்டுகள் !

''அவருக்குக் கதர் பிடிக்காது, காங்கிரஸ் பிடிக்காது, காந்தியையும் பிடிக்காது ! வடிகட்டிய ஜஸ்டிஸ் கட்சி ! ஆனால் கதர் கட்டியிருந்தாலும் என்னை அவருக்குப் பிடிக்கும்'' (ப.14) - இது குருசாமி வாழ்வின் அகரம் - பிள்ளையார் சுழி' ஆகிய மோசூர் கந்தசாமி முதலியார் பற்றிய அறிமுகம் ! திருவிளையாடல் புராண வகுப்பிலே, தம்மை மறந்து, சிவனும் உமையும் பேசிக்கொள்வதாக 'தடபுடலான ஆங்கிலத்தில்' பேசிக் கொண்டே வரும் மோசூரார், ''இவ்வளவு இங்கிலீஷ் கூடத் தெரியாவிட்டால் அவர் என்ன சிவபெருமான்'' என்று முடிப்பாராம்!

பாம்புப் பிடாரன் என்பது மோசூரார்க்கு இடப்பெற்ற செல்லப்பெயர்; அவர் பெரிய தலைப்பாகைக்காரர் என்பதல்ல காரணம்; வகுப்பறையில் அவர் பாடத்தில் சொக்கிய மாணவர்கள் அவருக்கு இட்ட மகிழ்ச்சிப் பட்டம்! பணி

நிறைவு பெற்ற பின்பும் பச்சையப்பன் கல்லூரியில் மதிப்புறு நிலையில் வகுப்பெடுக்கிறார்; ஒரு நாள் காலை ஒன்பதரை மணி! மு.வ.வும் துரையரங்கனாரும் வலுக்கட்டாயமாக 'அலக்காகத் தூக்கி' ரிக்ஷாவில் ஏற்றி வீட்டுக்கு அனுப்புகிறார்கள்; மோசூராரோ, "என் வகுப்பு, நான் தானே எடுக்க வேண்டும், முன் கூட்டிச் சொல்லவில்லையே!" என வேண்டுகிறார். இக்காட்சியைக் கண்ட குருசாமிக்குக் காரணத்தை விளக்குகிறார் மு.வ. : "அப்பா, அவர் பேரன் இறந்துபோனான். உடல் இன்னும் வீட்டிலே கிடக்கிறது. இவர் 'வகுப்பு, வகுப்பு' எனப் புறப்பட்டு வந்துவிட்டார்."

"ஒழுங்கு என்றால்? அதில் பிசகு இருக்கவே கூடாது.விதிகளுக்கு விலக்கு எங்கும் இருக்கும் என்பார்கள். ஒழுங்கு விதியிலே, அடிப்படை நியதிகளிலே விலக்கே கிடையாது என்பதை அவர் இரத்தத்தில் - உணர்வில் - உயிரில் - ஏற்றிவிட்டிருக்கிறார்" - மோசூரார் பற்றி குருசாமி வரைந்து வைத்திருக்கும் நூற்பா இது! (பக். 18).

மு.வ. என்பது அறுபதுகளில் தமிழர்தம் இல்லங்களில், இளைஞரின் இதயங்களில் ஆண்டு கொண்டிருந்த மந்திரச் சொல்! ஒழுக்கமும் இலட்சியமும் இரண்டு கண்கள் என மாணவர் அறிவைத் தீப்பிடிக்கச் செய்தது அவருடைய நாவல் 'அகல்விளக்கு'! பணப்பெட்டிகளே மரியாதைகளாகிப் போன இன்றைய தமிழகத்தில், 'திருமணப் பரிசு என்றால் அது மு.வ.வின் நூல்களைக் கொடுப்பதே' என்ற வழக்கம் இருந்ததை நம்ப முடிகிறதா? இத்தகைய மு.வ.தான், குருசாமியின் குருசாமி ! வாழ்வின் எல்லாக் கட்டங்களிலும் தூண்டா விளக்காய்த் துலங்கியவர்!

திரு.வி.க. என்ற கடைக்கால் மேல் நிறுவப்பட்ட கட்டடம் மு.வ. அவரை 'அருமையில் எளிய அழகு' எனப் பேரா. குருசாமி விளக்குகிறார். பாடத்தை நடத்தி முடிக்காமல் புகட்டியவர் மு.வ.! மாணவன் நன்றாகப் படிக்க வேண்டும், முதல் வகுப்பில் தேற வேண்டும், வேலையில் அமர வேண்டும், வீடு கட்ட வேண்டும், நூல்கள் எழுத வேண்டும் - வாழ வேண்டும், என வாழ்வித்த வள்ளல் அவர்!

மாணவர் எழுதியதைத் திருடி - அல்ல அல்ல, மேற்பார்வையாளர் என்ற அகங்காரத்தால் அப்படியே தன் பெயரில் மேற்கொண்டுவிடும் பேராசிரியத் - துணைவேந்தர் உலகில் மு.வ.வின் ஒளிக்கற்றை நிலைத்துச் சுடர்வதாகும்!

"பெரும்புகழ் பெற்ற ஓர் அறிஞர் சற்றும் அறிமுகமாகியிராதவர்களிடம் அணிந்துரை வாங்கி வெளியிடுவது வியப்பான செயல் அல்லவா?... திரு.வி.க.வைத் தவிர்த்தால் மு.வ. தம் மாணவர்களிடம் மட்டுமே முன்னுரை வாங்கி வெளியிட்டார். பச்சையப்பரில் அவரிடம் பயின்ற முதலணி மாணவர்கள் நால்வரிடமும் தம் நாவல்களுக்கு முன்னுரை

எழுதிவாங்கி வெளியிட்டவர்'' எனச் சுட்டும் குருசாமிதான் 'அல்லி'க்கு முன்னுரை எழுதிய முதல் மாணவராவார்! (பக்.30- 31).

மு.வ.வின் திருக்குறள் தெளிவுரை (2007 ஆகஸ்டு வரை 176 பதிப்புகள் வந்துவிட்டன) நூறாயிரம் படிகள் விற்பனை முடிந்தபோது கழகத்தார் (தி.மு.க. அல்ல; சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்) ஒரு பாராட்டு விழா நடத்த நினைத்தார்கள். மு.வ. மறுத்துவிட்டிருக்கிறார். ''தமிழ் நூல் விற்பனையிலே இந்தச் சாதனை இதுவரை இல்லை; பாராட்டு விழாவிற்கு வர மறுக்கிறீர்களே, என்று சைவத் திரு சுப்பையாப் பிள்ளை வாதாடிப் பார்த்தார். ''என்னை உண்மையாகவே பாராட்டுவதாக இருந்தால் நூலின் விலையைக் குறைத்து வையுங்கள்'' என்று சொல்லி விட்டார்'' மு.வ. (பக். 35).

தன் நூலின் வெளியீட்டுச் செலவை (உரூ. 660/-) மு.வ. ஏற்றுக்கொண்டதாகக் குறிப்பிடும் குருசாமி, அதைத் திருப்பிக் கொடுத்திருக்கிறார். ''இருக்கட்டும். அவசரம் இல்லை. வீட்டில் ரேடியோ இருக்கிறதா? முதலில் ரேடியோ வாங்கிக் கொள். எனக்குச் சேர வேண்டிய பணத்தைப் பின்னால் வாங்கிக் கொள்வேன்'' - இது மு.வ.

அந்தப் பணத்திற்கு ரேடியோகிராமே வாங்கலாம் எனக் கூறியிருக்கிறார். கடைகளில் குருசாமியோடு ஏறி இறங்கிய பேரா. அ.ச.ஞா, ஆசிரியர் சொன்னது ரேடியோ ! சரி, அதைக் கோவைக்கு வந்து வாங்கியிருக்கலாமே ! ''அப்படியெல்லாம் நினைத்துப் பார்த்து இந்தக் குருசாமிக்குப் பழக்கமில்லை. வாங்கு எனச் சொல்லி விட்டார், உடனே வாங்கிவிட வேண்டும்'' (பக். 43) - இது குருசாமி !

கடைசியாக ஒரு நிகழ்ச்சியைக் கூறி முடிக்கிறார்.

''இளமையில் மு.வ. கடவுள் நம்பிக்கை இல்லாதவராயிருந்தார். அவருடைய நண்பர் ஒருவர் - அப்பட்டமான ஆத்திகர் - நாள்தோறும் திருவாசகம் படித்துக் கசிந்து, கண்ணீர் விடுவாராம். 'செய்யுளைப் படித்து இப்படியா கண்ணீர் விடுவது' என்று மு.வ. அந்த நண்பரை எள்ளி நகையாடுவாராம் !

காலம் பறந்தது. மு.வ. ஆத்திகரானார். அவர் நண்பர் நாத்திகரானார். (பக். 44)

பேரா. குருசாமி இரண்டு அகத்தியர்களிடம் பாடம் கேட்டிருக்கிறார். ஒருவர் க. வெள்ளைவாரணர், மற்றவர் அ.ச. ஞானசம்பந்தன். இருவர் பற்றியும் குருசாமி குறிப்பிடுவன நெஞ்சையும் கண்களையும் நெகிழ்விப்பன.

தொல்காப்பியப் பெருங்கடல், பன்னிரு திருமுறை வரலாற்றை ஏறத்தாழ இரண்டாயிரம் பக்கங்களில் எழுதிய பெரும்புலவர்

வெள்ளைவாரணம் ! ''மரபு என்றால் தலை வணங்கி ஏற்பார் க.வெ., ஆனால் வேர் ஊன்றிவிட்ட மரபு என்பதற்காக அ.ச. ஞா. எதையும் ஏற்றுக்கொள்ள மாட்டார். திறனாய்வுத் துலாக்கோலை ஏந்திப்பிடித்துக் காலக் கணிப்பை எடைக்கல்லாக வைத்துத்தான் மரபு ஏற்கத்தக்கதா இல்லையா என்று முடிவு செய்வார்'' (பக். 48)

திறனாய்வு என்ற சொல்லைத் தமிழ் அரங்கிலே உருவாக்கியவர் அ.ச.ஞா. ! அத்தகைய புதுநோக்காளர், 'தமிழ் மரபை நன்கு புரிந்துகொள்ள முயலாமல் மேனாட்டுத் திறனாய்வாளர் கூற்றுக்களைக் கற்றவுடன் அவற்றை அப்படியே எல்லாவிடங்களிலும் ஏற்றிக் காண்பது இற்றை நாளில் சில அறிஞர்கட்கு இயல்பாகிவிட்டது'' எனக் கண்டித்தும் இருக்கிறார். குருசாமி எழுதுகிறார் : 'இந்த அளவிலேயே நிறுத்தியிருப்பாரானால் அ.ச.ஞா. என்ற திறனாய்வாளருக்கு ஒரு குறையாகவே முடியும். மேலே காட்டிய வாக்கியத்தை அடுத்து, ''இத்தவற்றை இந்நூலாசிரியனும் ஒரு காலத்துச் செய்ததுண்டு'' எனவும் எழுதியிருப்பது அ.ச.ஞா. என்ற திறனாய்வாளரின் பரிணாமத்தை உணர்த்துகிறது.'' (பக். 53)

தமிழ்ப் பேராசிரியர் அ.ச.ஞா. துணிச்சலும் துடுக்கும் நிறைந்தவர். செயல்வழி சுயமரியாதைக்காரர். அதிகாரப் பதவிகளுக்குப் பணியாதவர். போலிகளைப் புறக்கணித்தவர். கல்லூரி முதல்வர் முதல் யோகிகள் வரை இவரால் தூக்கி எறியப்பட்டுள்ளனர். முகதயவுக்காக உள்ளம் சொல்லாத நூலைப் பரிசுக்குரிய நூலாகத் தேர்ந்தெடுக்காதவர். பட்டிமண்டப வீரராகத் திகழ்ந்த அ.ச.ஞா. அது 'கோமாளித்தனமான டப்பாக் காட்சி'யானதும் ஒதுக்கித் தள்ளியவர். மேடையிலும் எழுத்திலும் சீர்திருத்தம் 'பேசி', நடப்பிலே அதை ஞாபகமாக மறந்து போகும் சாதியர் மத்தியில் அ.ச.ஞா. பற்றி குருசாமி கூறுகிறார் : ''அ.ச.ஞா. கலப்பு மணம் பற்றி மேடைகளில் பேசி நான் கேட்டதில்லை. நூல்களிலும் அதைப் பார்த்துப் பேசியதில்லை. ஆனால் தாம் கலப்பு மணம் செய்து கொண்டு, மக்களில் சிலர்க்கும் கலப்பு மணம் செய்து முடித்தவர் எங்கள் பேராசிரியர் அ.ச.ஞா. '' (பக். 57)

எவராக இருந்தாலும் எடுத்தெறிந்து பேசுவது அ.ச.ஞா. வின் பொதுவான பழக்கம். அவர் அடங்கி ஒடுங்கி மரியாதை காட்டியது தெ.பொ.மீ. சந்நிதானத்தில்தான். திரு.வி.கவைச் 'சின்னையா' என்றுதான் அ.ச.ஞா. விளிப்பார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யோகசுவாமிகள் அ.ச.ஞா.வுக்குத் தெய்வம். இந்த மூன்று பேரிடம் மட்டுமே அ.ச.ஞா. வணங்கிய வாயினராக - மரியாதையாக அடங்கி நிற்பார். (பக். 65)

ஒருமுறை 'சுவாமிகள்' ஒருவர் தாமே இராமலிங்க வள்ளலார் எனச் செருக்கியிருக்கிறார். அவர் முன்னால் அ.ச.ஞா., மேல்துண்டை மேலே போட்டவாறே நடக்க, சுவாமிகள், 'சாபம் போட்டுவிடுவேன்' எனச் சத்தம் போட, ''அ.ச.ஞா. திரும்பி வந்து தம் விசிறி மடிப்பு அங்கவஸ்திரத்தைச்

சாமியார் முன் விரித்துப் பரப்பிச், 'சாபத்தைப்· போடுங்கள், பிடித்துக் கொள்கிறேன்' எனக் கூறியிருக்கிறார்.

இன்பத்தில் திளைப்பதும் துன்பத்தில் துவள்வதும் மனித இயல்பு. ஆனால் அ.ச.ஞா. கண்பார்வை இழந்த பின்புதான் அருமையான நூல்கள் பல எழுதியுள்ளார். துன்பத்தையும் களிப்போடு ஏற்ற அதிசய மனிதரே அ.ச.ஞா. !

மொ.அ.துரையரங்கனாரை 'எங்கள் சேனாவரையர்' என்று எழுதுகிறார் குருசாமி. "சேனாவரையம் சிம்ம சொப்பனம் என்பர். எங்களுக்கு அந்தச் 'சிம்மம்' தெரியாது. 'சொப்பனமும்' தெரியாது. துரையரங்கனார் சேனாவரையத்தைக் கற்பித்தபோது அருமையான நாவல் படிப்பது போன்ற சுவையான அனுபவம் எங்களுக்கு வாய்த்தது" என்கிறார் குருசாமி.

"தன்னம்பிக்கை ஊட்டி, இலக்கணத்தைச் சுவையாகப் பாடம் நடத்துவதில் துரையரங்கனார்க்கு அவர் மட்டுமே நிகராக முடியும். தெளிவு வேறு, திளைப்பு வேறு ! தெளிவு ஏற்படக் கற்பிக்கும் ஆசிரியர்கள் பலர் உண்டு; தெளிவோடு திளைப்பும் ஏற்படக் கற்பிக்கும் ஆசிரியர்களே பேராசிரியர்கள்.... தண்டியலங்காரம், சேனாவரையும் போன்ற இலக்கணத்தில் இந்தச் சாதனை புரிவது சாதாரணமாக வாய்க்காது. துரையரங்கனார் இந்தச் சாதனையில் செயற்கரிய செயல் கொண்ட பெரியவர்" (பக். 73) என முடிக்கிறார் பேரா. குருசாமி.

திருவரங்கக் கோயிலின் ஏழாம் (கடைசி எல்லை) மதிலுக்கு "அடைய வளைந்தான்" என்றொரு பெயர் உண்டு; எல்லாவற்றையும் முற்றிலுமாக வளைத்துக் கொண்டு இருப்பது என்பது உட்குறிப்பு. பேரா. குருசாமியைப் பொறுத்தவரை தெ.பொ.மீ. எனப் பெருமையுடன் அழைக்கப்பெறும் பல்கலைச் செல்வர், பன்மொழிப் புலவர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், 'அடைய வளைந்தானுக்கு அப்பாலும் வளர்ந்தவர்" (பக். 77) இருபதாம் நூற்றாண்டின் கணிசமான 'கண்டுமுதல் எனப் போற்றப்பெறும் தெ.பொ.மீ. அவர்கள், "பேரறிஞர் ஒருவர் பல பிறவியில் சேர்க்க வேண்டிய அறிவுப் புலங்களின் செல்வங்களை ஒரே பிறவியில் பெற்று வாகை சூடியவர்" எனப் புகழப் பெறுகிறார். பிறவியில் நம்பிக்கையில்லாத இந்தக் கட்டுரையாளரைப் போன்றவர்கள் குறையறிவு உள்ளவர்கள் ஆதலால் தெ.பொ.மீ.யைப் போற்றச் சொற்கள் போதாமல் திண்டாடுகிறார்கள்.

எங்கள் கல்லூரி வாழ்க்கையில் தெ.பொ.மீ., வையாபுரியார் ஆகியோரைப் பழிப்பதையே திராவிட மாண்பாகக் கருதினோம்; அப்படிப்பட்ட பண்பாட்டில் எமது முன்னோர்களால் பழக்கப் பெற்றோம். கற்றலின் எல்லை விரிந்தபோது தான் இந்தப் பெருமக்களின் அறிவு மாட்சியைப் புரிந்து கொண்டோம். மயிலை சீனி.வேங்கடசாமி, க.அப்பாத்துரையார், மகாவித்துவான் மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை, பாவாணர், இலக்குவனார், சாலை இளந்திரையன் இப்படிப் பட்டத் தமிழ்ப் பெரும் ஞானிகளோடு

நெருங்கிப் பழகி அறிவு தேடியிருக்கிறேன். இந்தப் பேராசிரியர்கள் திராவிடச் சிந்தனை மரபை உயிராகக் கருதி வாழ்ந்து மடிந்தவர்கள். எந்தத் திராவிடத் தலைகளும் இந்தப் பேராசிரியர்கள் உயிர் வாழ்ந்த காலத்தில் இவர்களைப் போற்றவும் இல்லை, வணங்கவும் இல்லை ! தமிழர்கள் பதில் சொல்ல வேண்டும்.

தத்துவம், வரலாறு, தமிழ், மொழியியல், சட்டம் ஆகிய துறைகளில் பட்டங்களும் ஆழ்ந்த புலமையும் கொண்ட தெ.பொ.மீ., ஆங்கிலம், பிரெஞ்சு, வடமொழி, இந்தி ஆகிய மொழிகளில் வல்லுநரும் ஆவார். எனினும் இவர் முத்திரை பதித்தது மொழியியலே ஆகும் என்கிறார் குருசாமி ! இந்தியாவில் மொழியியல் என்ற அறிவுத்துறையின் முதலாவது மூவருள் (புனே, டெக்கான் கல்லூரி எஸ்.எம். கத்ரே, தில்லிப் பல்கலைக் கழக ஜி.பி. பண்டித்) தெ.பொ.மீ. அவர்களே தலைசிறந்தவராவார். அரசியல், தத்துவம் ஆகியவற்றில் பங்கெடுத்திருந்தவர் என்றாலும் வாழ்வின் இறுதிவரை, கல்விக் களத்தில் சேவைசெய்தவராவார் ! நிறை புலமையும் நினைவாற்றலுமே தெ.பொ.மீ சேர்த்து வைத்த செல்வங்கள் (பக். 84) என்கிறார் குருசாமி ! எந்தக் குறிப்புகளும் இல்லாமல் எந்தத் தலைப்பைப் பற்றியும் வித்தகர்க்கு வித்தகராய் பேசக் கூடியவர் தெ.பொ.மீ.

சென்னை, வேதாந்த சங்கத்தில் பேசிக் கொண்டிருந்த தெ.பொ.மீ.யைப் பார்த்து, ''குருதேவா, முல்லைப் பாட்டு ஒரு கவிதை என்றா சொல்கிறீர்கள், அப்படி ஒரு தகுதி அதற்கு இருக்கிறதா?'' என அ.ச.ஞா. அறை கூவியிருக்கிறார். தெ.பொ.மீ. என்ற தமிழ் மாமலையில் இருந்து பொங்கிய பேராறுதான் லாங்மென்ஸ் குழுமத்தாரால் ஆங்கிலத்தில் வெளியிடப்பெற்ற (பக். 83) நூலாகும். கோவை, பூ.சா.கோ. கலைக் கல்லூரியில் 'இந்திய இராமாயணங்கள்' பற்றிப் பேசிக்கொண்டே வந்தவர், கண்ணீர் வழிய, பேச்சை நிறுத்திவிட்டு நாற்காலியில் அமர்ந்துவிட்டார். 'ஏன் இப்படி' எனக் கேட்டதற்கு ''அந்த ஞானப் பெருந்தகை சொல்லிய விடை : I found I was losing myself, so i stopped" (பக். 83) இப்படி எண்ணற்ற நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டுகிறார் பேராசிரியர் குருசாமி.

தெ.பொ.மீ. அவர்கள் மதுரைப் பல்கலைக்கழகத்தின் முதல் துணை வேந்தர் ஆனபோது, ''கன்னித் தமிழ்ச் சோலையிலே காட்டெருமை நுழைகிறது'' என நாமாவளி பாடிப் பரவச மடைந்தவர்கள்தான் திராவிட பக்தலீலா - மிருதர்கள் ! ஆனால் அந்த இயக்கத்தின் மாபெருங் கவிஞன், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சாகித்ய அகாதமி பரிசு பெறக் காரணமாயிருந்தவரே தெ.பொ.மீ. தான் ! ஆம், இந்தக் 'காட்டெருமை' கவிச்சோலையை நாசமாக்கவில்லை; இந்திய அளவிற்கு உயர்த்திப் படித்தது! புரட்சிக் கவிஞரின் கவிதைக்குப் பரிசு கிடைக்காமல் நாடகத்திற்குப் பரிசு கிடைத்தது பொருத்தமாயில்லையே எனக் கருதி, பேரா. குருசாமி கேட்டதற்கு தெ.பொ.மீ. அளித்த விடை : ''அப்பா, அவர் எழுதியவற்றுள் இந்த நூல்தான்

விருது பெறுவதற்குரிய காலத்தில் வெளிவந்திருக்கிறது. நாம் இருக்கிறபோது இந்த விருதினை வழங்காவிட்டால், பிறகு கிடைக்காமலே போகலாமோ என்பதால் நான்தான் இந்த முடிவை வற்புறுத்தினேன்!'' (பக். 86)

தெ.பொ.மீ. அவர்கள் தன் வாழ்வின் சாயுங்காலத்தில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் 'பகுத்தறிவு' என்ற தலைப்பில் அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்த்தினார். மூன்றுநாள் சொற்பொழிவு : பகுத்தறிவு - பெரியாருக்கு முன், பெரியாரும் பகுத்தறிவும், பகுத்தறிவு - ஐயன்ஸ்டீன் வரை ! இந்தக் கட்டுரையாளரும் அப்போது அவையில் இருந்து சொற்பொழிவுகளைக் கேட்டிருக்கிறார். உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால் முதலிரண்டு சொற்பொழிவுகள் மட்டுமே எனக்குப் புரிந்தன; மூன்றாவதைப் புரிந்து கொள்ளும் அறிவு அன்று எனக்கில்லை. அது மட்டுமா? சொற்பொழிவு முடிந்ததும் வீட்டுக்குப் போக, தெ.பொ.மீ., ஆட்டோ ரிக்ஷாவிற்காகக் காத்திருந்த அந்தக் காட்சி !

பேரா. குருசாமியின் 'குருமுகம்' நமக்கு அளிக்கும் உட்காட்சிகள் (vision) தமிழர்கள் தங்களின் இன்றைய நிலையை எடையிடப் பயன்படும் உயரிய அளவுகோல்கள் ! தமிழமுதம் அளித்த தனிப்பெரும் பேராசிரியர்களைப் பற்றிக் கூறும் குருமுகம், வேம்படி முனிவர் பற்றியும் சிங்கமுகம் பற்றியும் கூறுகிறது.

யார் இந்த வேம்படி முனிவர்? மு.வ.வின். வரிகளைக் குருமுகம் எடுத்தெழுதுகிறது. ''நால்வர்க்கு நன்னெறி உணர்த்திய இறைவனுக்குக் இடம் தந்த கல்லால மரம் போல, பல்லோர்க்குப் பண்பு உணர்த்தப் பயன்படும் வேப்பமரம் ஒன்று சாது அச்சுக் கூடத்தில் உள்ளது. அதன் நிழலில் அவரிடம் அறிவுரை கேட்க வந்தோர் பலர், மிகப்பலர் ! அவர்களுள் சிலர் அரசியல் தலைவர்கள், சிலர் மொழிப் புலவர்கள், சிலர் சமயக் கணக்கர், முதலாளிகள் சிலர், தொழிலாளிகள் பலர், சிலர் சமூகச் சீர்திருத்தக்காரர், வாழ்க்கைப் பேராட்டத்தில் வாடியவர் சிலர், காதல் உலகத்தில் கலங்கியவர் சிலர், முதியர் சிலர், இளைஞர் பலர். அனைவர்க்கும் நண்பராய் அல்லலும் சோர்வும் போக்கி அறிவும் ஊக்கமும் ஊட்டியவர் திரு.வி.க. ! அவர்தம் அறிவின் ஆற்றலுக்கு அந்த வேப்ப மரம் சான்று ! (பக். 96)

மு.வ. அறிமுகப்படுத்தி இருந்ததால், எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் பேரா. குருசாமி தன் நண்பர்கள் மூவருடனும் தவறாது திரு.வி.க.வைச் சந்தித்துப் பேசியிருக்கிறார். எல்லாவற்றைப் பற்றியும் பேசி இருக்கிறார்கள். திரு.வி.க. வயதையும் முதிர்ச்சியையும் மறந்து பேசியிருக்கிறார். பேசுவதற்கு உரிய வழியைக் காட்டியதாகக் கூறுகிறார் குருசாமி ! 'இருவருமே ஒருவரெனில் எவர் பெரியவர், சிறியர்'' எனப் பிரித்துண முடியாதபடிப் பேசுவோம்'' என்கிறது குருமுகம். தன் மகன் அரசு, திரு.வி.க.வைப் போய்ப் பார்க்கவில்லையே என வருந்தியிருக்கிறார் மு.வ.

திரு.வி.க. தொடர்ந்து குடியிருந்தால் அந்த வீட்டை நினைவுச் சின்னமாக ஆக்கிவிடுவார்களோ என 'அஞ்சி' அவரை வெளியேற்றி இருக்கிறார் வீட்டின் சொந்தக்காரர். 'சீ...சீ.... தமிழகம் அந்த அளவிற்கு நன்றியுடையது அல்ல; செய்நன்றி கொன்றோரே உய்ய முடியும்!'' என்கிறது குருமுகம்.

''.....கணக்கற்ற அந்த மணி வேளைகளில் நாங்கள் பெற்ற அந்த அகவளர்ச்சிக்கு ஓர் அளவே கிடையாது. கல்லூரிக்கு அப்பால் எங்களுக்கு வாய்த்த தட்சிணாமூர்த்தியாக விளங்கினார் ஞானப் பெருமானாகிய திரு.வி.க. (பக். 39)'' என்கிறது குருமுகம் !

''வேம்படி முனிவரைத்' தொடர்ந்து வரும் 'சிங்கமுகம்' யார்? வேறு யாராக இருக்க முடியும் - ம.பொ.சியைத் தவிர ! பேரா. குருசாமியின் வாழ்க்கையில் சிந்தனை முறையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியவர்கள் திரு.வி.க.வும், ம.பொ.சி.யுமே ஆவர். காந்தியம், தமிழ், பொதுமை நலம், பெண் விடுதலை, தொழிலாளர் முன்னேற்றம் என்பனவற்றின் பிழிவாக விளங்கியவர் திரு.வி.க. ! காந்தியம், தேசியம், தமிழியம் என்ற ஒளிக்கற்றையே மா.பொ.சி. ! இந்த இருபெரும் மேதைகளும் பேரா. குருசாமியின் அறிவு முகத்தில் அமைந்த கண்களாவர்.

இரண்டு வாழ்நாள் தண்டனை பெற்று, குவித்த செல்வம் அனைத்தையும் தான் நேசித்த தேசியத்திற்காகவே செலவழித்த பெருந்தகை வ.உ.சி. ஆவார். அப்பழுக்கற்ற தேசியவாதியாகவும் அதே சமயம் தமிழர் நலன் போற்றும் தமிழ்ச் செம்மலாகவும் விளங்கிய கப்பலோட்டிய தமிழனுக்கு அன்றைய காங்கிரசுத் தலைமையகத்திலே மார்பளவுச் சிலை எடுத்தார் ம.பொ.சி. ஆனால் சாதிவெறித் தேசியமோ, 'கிராமணி, நீ என்ன ஜஸ்டிஸ் கட்சிக்காரனா? சிதம்பரம் பிள்ளை சிலையைத் திறந்திருக்கிறாயே'' எனக் கண்டித்திருக்கிறது (ப. 105)

குருசாமி குறிப்பிடுகிறார் : 'அது என்னவோ தெரியவில்லை, தமிழ் நாட்டுத் தேசியவாதிகளின் போக்கிலே அப்படி ஒரு தனித்தன்மை ! விடுதலைப் போராட்டத்தின் போதும், 1947 ஆகஸ்டு பதினைந்தை ஒட்டியும், 'தமிழ், தமிழன் என்று சொன்னால் குறுகிய மாகாணப்பற்று, பிரிவினை வாதம்' என்று கண்டிக்கும் நிலை இருந்தது'' (பக். 105-106) தேசியம் என்ற பெயரால் தமிழ், தமிழர் என்ற வரலாற்று எழுச்சியையே கேவலப்படுத்திக் கொண்டிருந்த போலித் தேசிய நரிகளினிடையே சிங்கமென வீறுகொண்டு எழுந்த தமிழ் மறவரே ம.பொ.சி. ஆவார். அவரைப் பற்றிய கட்டுரைக்குச் 'சிங்கமுகம்' எனத் தலைப்பிட்டது எல்லாவகையிலும் பொருந்தும்.

''இங்கே ஒருவர் சிலப்பதிகாரம் பற்றி நன்றாகப் பேசுகிறார்' என்று சொன்னார். அதுவும் காங்கிரஸ்காரர் ! அன்றைய சூழ்நிலையில் இந்தச்

செய்தியை அவ்வளவு எளிதாக நம்பிவிட முடியாது. சரி, போய்த்தான் சொற்பொழிவைக் கேட்டுப் பார்க்கலாமே', என்று ஒரு ஞாயிற்றுக்கிழமையில் போய்க் கேட்டேன். (பக். 106) என, ம.பொ.சி. தனக்கு அறிமுகமான வாதத்தைக் குறிப்பிடுகிறார் பேரா. குருசாமி; அன்றைய நாள் முதல் ம.பொ.சி.யின் இறுதிக் காலம்வரை அவர் இதயத்தில் இடம்பெற்ற தமிழ்ப் பேராசிரியரே குருசாமி ஆவார்.

''.....ம.பொ.சி. தமிழ் நாடி நரம்பினை அறிந்தவர். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வழிவழித் தோன்றி வாழ்ந்துவரும் புலவர் உலகம் காணாத புதிய செய்திகளை ம.பொ.சி. காண்கிறார்கள். பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற எங்களுக்குப் புரியாதவற்றையெல்லாம் அவர்கள் சொல்லுகிறார்கள். எல்லோரும் புரிந்து கொள்ளும் வகையில் எளிய தமிழில் சொல்லுகிறார்கள்'' (பக். 128) எனத் தெ.பொ.மீ.யால் பாராட்டப் பெற்றவர் ம.பொ.சி. ''சிவஞானம் ஒரு Live wire; எப்போதும் சிந்தனை, ஓயாத சிந்தனை' எனப் போற்றுகிறார் அ.ச. ஞானசம்பந்தம் (பக். 134)

ஜனவரி 14ஐப் (தை முதல் நாளை) பொங்கல் விழா என முதன் முதலில் கொண்டாடியவர், சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக வீற்றிருந்த கா. நமச்சிவாயர் ஆவார். ஆனால் 1946 ஜனவரி 14இல் முதன் முதலாகத் 'தமிழர் திருநாள்' கொண்டாடியவர் ம.பொ.சி. தமிழர் வரலாற்றில் பொங்கல் திருநாளைத் தமிழரின் தேசியத் திருநாளாகக் கொண்டாடியவர் ம.பொ.சி. எனக் குருசாமி சுட்டிக் காட்டும் போது தமிழரின் தேசியப் பெருமிதங்களை வாழ்வித்தவர் யார், அழித்தவர் யார் என்ற வரலாற்று வினா எழத்தான் செய்கிறது.

''அந்நாளைய காங்கிரசாருக்கோ மற்றக் கட்சியினருக்கோ வேங்கடமும் குமரியும் எல்லைகளாகக் கொண்ட தமிழகம் உருவாக வேண்டும் என்றெல்லாம் எண்ணம் இருந்ததில்லை. புதிய தமிழகம் பற்றிக் கருதாமல் இருந்ததைக் கூட மன்னித்து விடலாம். அப்படி ஒரு கருத்தோட்டத்தை எழுப்பிப் பாடுபட்ட ம.பொ.சி.யையும் அவர் தொடங்கி நடத்திய தமிழரசுக் கழகத்தையும் தூற்றிச் சிறுமைப்படுத்துவதிலும் மற்ற அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் ஆர்வம் காட்டினார்கள் என்பதைத் தமிழின உணர்வுடையோர் மறக்க முடியாது; மன்னிக்கவும் முடியாது (பக். 109) என வரலாற்று வேதனையை வடித்தெடுக்கிறார் குருசாமி !

தமிழ்நாட்டில் இன்று வரை வேதனை மிகுந்த விபத்துகளாகவே தலைவர்களைப் பற்றிய வரலாற்றுச் செய்திகள் விவாதிக்கப்படுகின்றன. இலக்கியத் திறனாய்வும் வரலாறு எழுதுகையும் கூட 'வியத்தலும் இகழ்தலுமாகவே' அமைந்து வருகிறது. தமிழ், தமிழர் விடுதலை என்பதும் பகுத்தறிவு, பொதுவுடைமை என்பதும் முரணி நிற்க வேண்டிய பகை முரண்பாடுகளல்ல; தழுவி நிற்க வேண்டிய தோழமை இடைவெளிகளாகும்.

இந்த இடைவெளிகள் சமன்படுத்தப்படாமல் போனதன் வீழ்ச்சிகளை, கொடுமைகளை, விளைவுகளை இன்றைய தமிழகத்திலும் ஈழத்திலும் நாம் வெளிப்படையாகக் காண்கிறோம் என்பதே இந்தக் கட்டுரையாளரின் முடிவாகும்.

பேரா. குருசாமி, பாளையங்கோட்டை தூய யோவான் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த காலம். அப்போது ம.பொ.சி.யின் 'தமிழ் முரசு' மாதப் பத்திரிகையாக வெளிவரத் தொடங்கியது. பாளையங்கோட்டைக்கே நேரில் சென்று தன் மாதப் பத்திரிகையில் துணையாசிரியராக வேலை செய்ய குருசாமியை அனுப்பி வையுங்கள் என்று ம.பொ.சி. அவர்கள் குருசாமியின் அண்ணன் அவர்களிடம் கேட்டிருக்கிறார். அவரும் இசைவளிக்க, கல்லூரி வேலையை விட்டு விட்டுச் சென்னை வந்து சேர்ந்திருக்கிறார் குருசாமி.

மாணவர் நாள் முதல் ம.பொ.சி.யின் தமிழாலும், தமிழின விடுதலை உணர்வாலும் ஈர்க்கப்பட்ட குருசாமி, கல்லூரி வேலையை விட்டுவிட்டுத் தமிழ் முரசில் துணையாசிரியராகச் சேர்ந்த பேரா. குருசாமி, தன் இலக்கியப் படிப்பால், ம.பொ.சி. யைப் போலவே தானும் இன உணர்வு பெற்றதாகக் கூறும் குருசாமி, தான் ஏன் ம.பொ.சி.யிடம் தொடர்ந்து இருக்காமல் மீண்டும் கல்லூரி ஆசிரியனாக மாறி, இறுதிவரை பேராசிரியனாக இருந்துவிட்டது. எதனால் என்பது பற்றி விளக்குகிறார். பதவிக் காலம் முழுக்க ஐம்புலன்களையும் அவித்துக் கொண்டு வாழ்ந்து, பணி நிறைவு பெற்றதும் தமிழ் வீரம் பேசும் இற்றை நாள் பேராசிரியப் பெருமக்களிடையே குருசாமி குன்றென உயர்ந்து நிற்பது இந்த இடத்தில் தான் ! தேசியம், காந்தியம், தமிழ் என்ற மூன்றாலும் ம.பொ.சி.யிடம் ஐக்கியமாகியிருக்க வேண்டிய குருசாமி, 'ஏன் விலகி வந்தேன்' என்பதை விளக்குகிறார்!

உத்தியோகப் பசியை அடி மனத்தில் விதைக்கும் கல்வித் திட்டம்; மேல் தட்டிலும் கீழ்த்தட்டிலும் இல்லாமல் இடைத்தட்டில் பிறந்து விட்டமையால் துணிச்சல் இல்லாமல் போனது என மிகத் துணிவாகக் கூறுகிறார் குருசாமி. "சிறுவராக இருந்தபோது ம.பொ.சி.யே ஒரு தடவை அடகு வைக்கப்பட்டவர். அவருக்கு இருந்த இலட்சியக் காதல் எனக்கு இல்லை. மழுப்புவதில் மற்றவர்களை ஏமாற்றலாம் என் மனச்சான்று வாட்டி எடுக்குமே ! இன்னொன்றையும் சொல்ல வேண்டும். காந்தியடிகள், இராஜாஜி, அறிஞர் அண்ணா போன்றவர்கள் கற்றுப் பட்டம் 'பெற்றவர்கள் தாமே! அவர்களைப் போல் நானும் நடந்திருக்கலாமே! கேள்வி கேட்டது சரிதான். ஆனால், அவர்களுக்கு இருந்த அளவுக்கு இலட்சியக் காதல் எனக்கு இருந்திருந்தால் கல்லூரிப் பணிக்கு வந்திருக்க மாட்டேன். நான் மேலே சொன்ன மூவரிலே சமுதாய அமைப்பில் அறிஞர் அண்ணாவின் நிலை கிட்டத்தட்ட என் நிலை போன்றதுதான். அவர் பொது வாழ்வரங்கில் எதிர் நீச்சலிட்டு வளர்ந்தவர். அந்த எதிர் நீச்சலுக்கு என் உத்யோகக் காதல் எதிரி.

எனவே safe and secure என்று 'கூலி வாழ்க்கையில்' இறங்கிவிட்டேன்'' (பக். 116-117). பேராசிரியர் குருசாமியின் 'குருமுகம்' என்ற இந்த நூல் பளிச்சிடுவதும், ஒப்பற்றதாக உயர்ந்து நிற்பதும், இன்றை இளைய தமிழர்க்கு வழிகாட்டுவதும் இப்படிப்பட்ட வரலாற்று உண்மைகளின் வெடிப்புகளால் தான்! உண்மை எப்போதும் வெளிப்படையாகவும் எளிமையாகவும் இருக்கும்.

மா.பொ.சி.யின் வறுமை அவரைப் பொது வாழ்க்கையில் வலுவுள்ளராக மாற்றியதே தவிர வீழ்த்தி விடவில்லை! தொடக்கக் கல்வியைக் கூட முழுமையாகப் பெறாத ஒருவர், பட்டம் பல பெற்ற மேதைகளால் பாராட்டப் பெற்றார். எந்தக் காலத்திலும் அன்பு, தலைமைப் பாசம் என்ற போலிப் பண்புகளுக்காக இலட்சியத்தை இழக்காதவர் ம.பொ.சி. இராஜாஜியைத் தலைவராக ஏற்றுக் கொண்டார்; ஆனால் எல்லைப் போர், மொழிச் சிக்கல், தட்சிணப் பிரதேச எதிர்ப்பு என்பனவற்றில் இராஜாஜிக்கு எதிராகவே வேலை செய்தார் வென்றார்.

ம.பொ.சி.யும் பெரியாரும் ஒரே தொடர் வண்டியில் பயணம் செய்கிறார்கள். வண்டி விருதுநகரில் நிற்கிறது. பெரியாருக்குக் காலைச் சிற்றுண்டி வந்து சேர்கிறது. ''எனக்குக் கொடுப்பது இருக்கட்டும். இரண்டு பெட்டி தாண்டிக் கிராமணியார் இருக்கிறார். வயிற்று வலிக்காரர். அவருக்கு முதலிலே இந்த இட்லியைக் கொடுத்து வாருங்கள்'' என்கிறார் பெரியார். குருசாமி எழுதுகிறார் : 'ஆம்! அப்போதெல்லாம் தலைவர்களிடம் மனிதநேயம் இருந்தது'' (பக். 127)

இலக்கியங்களையும், இலக்கிய மாந்தர்களையும் இன மீட்சிக்காகப் போற்றிப் பயன்படுத்தியவர் ம.பொ.சி. ஒரு சாதாரணத் தமிழன் தலைவர்கள் போற்றும் தலைவராக உயர முடியும் என வாழ்ந்து காட்டி நிறுவியர் ம.பொ.சி. ! இதுவே குருமுகம் காட்டும் சிங்கமுகம் !

பேரா. குருசாமி எழுதுகிறார் : ''..... நானும் சர்வாதிகாரியானால் ம.பொ.சி. எழுதிய விடுதலைப் போரில் தமிழகம், புதிய தமிழகம் படைத்த வரலாறு, எனது போராட்டம் என்ற நூல்களிலே தேர்ச்சி பெறாதவர்கள் தமிழக அரசியலிலே இடம் பெறக் கூடாது எனச் சட்டம் உருவாக்குவேன் ! சிலப்பதிகாரம் பற்றியும், பாரதியார் பற்றியும் அவர் எழுதியவற்றைப் படிக்காதவர்களுக்குத் தமிழ்ப் புலமைக்கான பட்டம் தரக்கூடாது எனச் சட்டம் பிறப்பிப்பேன் !'' (பக்.-124).

அறிவும் ஆளுமையும் தந்த ஐம்பெரும் பேராசிரியப் பெருமக்கள், சிந்தனைச் செழுமையால் செயல் முறைகளால் அரசியலும் வாழ்க்கை நெறிகளும் கற்பித்த சான்றோர் இருவர் என எழுவரின் வரலாற்றிற்குப் பின்பு ஈன்று புறம் தந்து சான்றோனாக்கிய தாயைப் பற்றியும், நன்னடை நல்கிய அண்ணனைப் பற்றியும் எழுதுகிறார் பேரா. குருசாமி !

வரலாறு என்பது பிறப்பு, இறப்பு, போற்றிப் பரவல் அட்டவணை அல்ல ! இரத்தமும் சதையுமாய் கிடக்கும் ஓர் இனத்தின் வாழ்வில் தனிமனிதர்களும் சமுதாயமும் பாதை பற்றிய விமர்சனம் ஆகும். பாரதங்களும் புராணங்களும் தான் மனிதனை மகாத்மா ஆக்க வேண்டும் என்பது அவசியமன்று ! எதிர்பார்ப்பற்ற அன்பின் பயணம் தியாகங்களாகவே முடிகின்றது. குருசாமியின் வாழ்வில் அவரது அண்ணன் ம.ரா. சண்முகசுந்தரம் பேராசிரியரைக் கரைசேர்த்த கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறார்.

''திரு.வி.க. முதலான சான்றோர் பழக்கத்தால் என் வாழ்வு கனிந்திருக்கிறதென்றால் அதற்கேற்ற மனப்பக்குவத்தை உருவாக்கி ஊட்டியவர்கள் எங்கள் அண்ணாச்சியவர்கள்தான்! பக்குவமும் பண்பாடும் என்னைப் பொறுத்தவரையில் என் வீட்டிலேயே கிடைத்தன.... அவையத்து முந்தியிருப்பச் செய்தது என்னைப் பொறுத்தவரையில் எங்கள் அண்ணாச்சியவர்கள்தான்'' (பக். 151) என 'ஆணிவேராய் ஆலமரமாய்' அமைந்த தன் அண்ணனைப் பற்றிக் குருசாமி நெகிழ்ந்து கூறுகிறார்.

அண்ணன் வெள்ளை வேட்டி - அதுவும் கரையில்லாத கதர் வேட்டி கட்டுபவர், எனவே தானும் கதர் வேட்டி கட்டுதல் - இப்படி அகரம் முதல் ஔகாரம் வரை தன் அண்ணனின் வாழ்க்கைச் சுடரில் ஒளிர்ந்திருக்கிறார் பேரா. குருசாமி! அறிஞர்களின் அறிமுகம், சமயப் பெரியோர்களின் பழக்கம் என யாவும் தன் அண்ணன் மூலமாகவே பெற்றிருக்கிறார்.

பேரா. குருசாமியின் அண்ணனின் இதயத்தில் இருந்த ஓர் ஒளிப்பொறி பட்டுத் தீப்பந்தமாகச் சுடர்கிறார் ம.ரா.போ. !

ம.பொ.சி.யின் ஒப்பற்ற பல தொடர் சொற்பொழிவுகளிலே முதன்மையானதும் தலைமையானதும் அவருடைய 'புதிய தமிழகம்' பற்றிய சொற் பொழிவாகும். சென்னை, லிங்கிச் செட்டித் தெருவில் அரும்பிய இந்த மலர் விரிந்து மலர்ந்து மணம் பரப்பியது திருச்சி மலைக்கோட்டைத் தாயுமானவர் திருக்கோயில் மண்டபத்திலே ஆகும். 26.6.1945இல் திருச்சி மலைக்கோட்டை மண்டபத்தில் 'புதிய தமிழகம்' பற்றிப் பேசியிருக்கிறார் ம.பொ.சி. இலக்கியம் பற்றித் தொடங்கிய இந்தச் சொற்பொழிவுதான் அவருடைய சிந்தனையில் இருந்த விடுதலை பெற்ற தமிழகம் பற்றிய முதல் பிரகடனம் ஆகும். இந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கியவர் காந்தியக் கவிஞர் வெ. இராமலிங்கம்; ஏற்பாடு செய்தவர் வேறு யாருமல்ல - பேரா. குருசாமியின் அண்ணன் ம.ரா. சண்முகசுந்தரம் ஆவார்.

''ஏதாவது படித்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்ற உணர்வும் பழக்கமும் அண்ணாச்சியவர்களால் என்னுள் ஏற்பட்டவை. ஒன்று மட்டும் அவர்களைப் போல் என்னிலே பதியவில்லை. ஞானத் தெளிவு....என்னையும் என் அண்ணன் திரு. பால. கணபதியையும் படிக்க வைத்து வளர்க்கும்

பொறுப்பை எங்கள் அண்ணாச்சியவர்கள் வலிய ஏற்றுக் கொண்டார்கள். சிறுவர்களாகவே எங்கள் அண்ணாச்சியவர்கள் ஏற்று 'மனிதர்'களாக ஆக்கினார்கள்'' (பக். 154-155). குருமுகத்தின் மூச்சுக் காற்றை நம்மால் உணர முடிகிறதல்லவா!

நூல் முடிவுக்கு வருகிறது. ஆனால் தன் வாழ்வின் தொடக்கப் புள்ளியைத் தொடுகிறார் பேரா. குருசாமி. 'மாற்றா உள்ள வாழ்க்கையேன்' என்று தன்னைப் பற்றிக் கண்ணகி கூறுவது சிலம்பில் ! ''அந்தத் தொடருக்கு முழுப்பொருளை - உண்மை விளக்கத்தை எங்கள் அம்மாவை கவனித்துத் தெரிந்து கொண்டேன்'' எனக் குருசாமி கூறுவது 'குருமுகத்'தில்!

அம்மாவைப் பற்றி ஒரு சிறு குறிப்பாவது தர விரும்பும் குருசாமியின் இதயம் எழுத்தாக இழைகிறது. 'திருக்கோயில்களிலே கருவில்லமாகிய மூலஸ்தானத்திலே இருக்கும் திருவுருவம் வெளியே உலா வராது. அப்படி உலாவரும் உற்சவ மூர்த்தி வேறு. என் ஆளுமை வாழ்வில் உற்சவமூர்த்தி அண்ணாச்சியவர்கள்; மூலமூர்த்தி என் அம்மா'' (பக். 172)

பேராசிரியர் குருசாமியின் 'குருமுகம்' என்ற நூலைப் பற்றிச் சிறிய அறிமுகக் குறிப்பை எழுதவேண்டும் என எண்ணியே தொடங்கினேன்; ஆனால், அது இப்படியொரு கட்டுரையாக விரியும் என்று நான் எண்ணவே இல்லை ! ஆனால் இப்படி இது மலர்ந்ததற்கான காரணங்களும் என் அடிமனதில் ஆழக் கிடக்கின்றன.

பேரா. குருசாமி குறிப்பிட்டுள்ள பெருமக்களில் மு.வ.வும் திரு.வி.க.வும் எங்கள் பள்ளி - கல்லூரிப் பருவ வாழ்வில் எங்களின் அறிவுத் துணையாய் அமைந்தவர்கள். இவர்களுக்கு அப்பால் எங்களைச் செதுக்கியவர்கள் காண்டேகரும் பெரியாரும்தான். எங்கள் அறிவைத் தீட்டிச் சமூகக் கொடுமைகளோடு போராடத் துணிவு தந்தவர் பெரியாரே! கேள்வி கேள்! புரிந்துகொள் ! அறிவே உரைகல் ! நடைமுறையே தத்துவத்தின் வெற்றி என்ற செந்நெறியை நாங்கள் ஏற்றுக்கொண்டது பெரியாருக்கு அப்பால் மார்க்சியத்தில் தான் ! அப்படியானால் ஐயா குருசாமியின் 'குருமுகத்தில்' எப்படி என்னால் ஆழ்ந்து தோய்ந்து மகிழ முடிந்தது! இதுவும் எனக்கு வியப்பானதாகத் தெரியவில்லை!

பேரா. குருசாமியின் இந்த நூல் வெறும் தரவுகளின் தொகுப்பல்ல; தமிழர் தெரிந்துகொள்ள வேண்டிய வரலாற்றுச் சுவடுகளின் ஒளிவெள்ளம்! வாழ்ந்து மறைந்த பேராசிரியப் பெருமக்கள் இந்தத் தமிழகத்தை வாழ்விப்பதற்காகச் செய்த தியாகங்களின் நெருப்புக் குவியல் ! தமிழகத்தில் தேசியம், காந்தியம், பெரியாரியம், மார்க்சியம் என்பன அழுகிய அரசியல்வாதிகள் தங்கள் முகங்களின் நாற்றத்தை மறைக்கப் பயன்படுத்தும் அத்தர் புட்டிகளாகவே உள்ளன. அண்ணா, தம்பி, அம்மா, தோழர், ஐயா, தமிழ்,

தமிழன், அறம், ஒழுக்கம் என்பன 'சாராயம் + சினிமா + தொலைக்காட்சி + மதசாதி வெறி + மேடைப் பேச்சு + கட்சி நியாயம்' என்ற சுனாமி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுவதைத் தடுக்க முடியாத பேரவலமே இன்றைய தமிழகத்தின் நடைமுறை!

நாத்திகப் போர்வாள்கள் 'மானாட மயிலாடக்' குடும்பமே கோயிலென முனை மழுங்கிப் போனார்கள் ! ஆத்திக மடங்களும் அவற்றின் 'பெரியவால்'களும் கொலைக் குற்றவாளிகளாகியும் பட்டனப் பிரவேசம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்! தேசியத்திற்கு ஓர் அம்மா! திராவிடத்திற்கு ஓர் அம்மா! நடிகர்களின் ஆளுயரக் கட்டை பொம்மைகளுக்குப் 'பீர்' அபிஷேகம்! சர்வ தேசியக் கம்யூனிச சவடால்கள் பதவிப் பசியாற படிதாண்டத் தவம் கிடக்கும் பரிதாபம்! சாதி - பணம் - அரசியல் என ஒரே சமயத்தில் மூன்று வண்டிகளில் பயணம் செய்யத் துடிக்கும் துணைவேந்தர் கனவுகள்!

- இதோ, இந்தச் சேற்றில் திணறும் சுயமரியாதைத் தமிழனுக்கு குருசாமியின் குருமுகம் ஓர் எச்சரிக்கையும் கைகாட்டியுமாம்!

"திரு.வி.க.விடம் பழகிய பேற்றினால் நான் அறிந்து அமைத்துக் கொண்ட பண்பு ஒன்று உண்டு. கருத்து வேற்றுமைக்கு இடம் தரப் பழகிக் கொள்ள வேண்டும் என்று வேம்படி முனிவர் அடிக்கடி சொல்வார். நம்மை எதிர்ப்பவர்களாக இருந்தாலும், அவர்களிடமுள்ள சிறப்புகளையும் அறிந்து உளமாரப் போற்றப் பழகிக் கொள்ள வேண்டும். அதுவே மனிதம்". (பக். 124)
-இதுதான், இந்த மனிதம்தான் 'குருமுக'த்தின் பேரொளி!

## வருந்துகிறோம்

09-07-11 அன்று மறைவுற்ற மதுரைத் தமிழ்ச்சங்க உறுப்பினரும், தமிழறிஞருமான **கா. கலியபெருமாள்** அவர்களின் மறைவு ஈடுசெய்யவொண்ணாப் பேரிழப்பாகும். தமிழ்ச் சங்கத்திற்கும், தமிழ்ச் சமூகத்திற்கும் அவர் ஆற்றிய அரும்பணி நினைந்து போற்றத்தக்கது. அன்னாரின் மறைவிற்கு மதுரைத் தமிழ்ச்சங்கம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

# வாசகர் வாசகம் 1

பெருந்தகையீர்,

வணக்கம். சூலைத்திங்கள் செந்தமிழில் வெளிவந்துள்ள பேரா. திரு முனைவர் து.மூர்த்தி என்பாருடைய ஒப்பிலக்கியக் களங்கள் என்னும் கட்டுரை மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. உரிய செய்திகளை வரிசைப்படுத்தி வந்த கட்டுரையாகும். கட்டுரை வழங்கிய நண்பருக்கும் வெளியிட்ட செந்தமிழ் இதழுக்கும் என் மனம் நிறைந்த பாராட்டு.

முனைவர் நெல்லை
**ந. சொக்கலிங்கம்** நாகமலைபுதுக்கோட்டை

---

# தமிழ்ச்செம்மல் விருது



இரா. குருசாமி

2011ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 14, 15, 16 ஆகிய நாட்களில் நடைபெற்ற கரந்தைத் தமிழ்ச்சங்க நூற்றாண்டு விழாவின் இரண்டாவது நாள் நிகழ்வில் **'தமிழ்ச்செம்மல்'** விருது வழங்கப்பெற்று கௌரவிக்கப்பட்ட மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செந்தமிழ்க் கல்லூரிச் செயலாளரும், தமிழகத் தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவருமான **இரா. குருசாமி** அவர்களை வாழ்த்துகிறோம்.



**சு. வீரணசாமி**
ஆட்சிக்குழு உறுப்பினர்
மத்திய அரசு வழக்கறிஞர்



**க. முத்தையா பசும்பொன்**
ஆட்சிக்குழு உறுப்பினர்
வழக்கறிஞர்

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா


தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : **தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை - 1**

RNI Regd. No. 5508/57 August 2011 MA/130/2011-2013
Posted at Madurai BPC on 25th of every month


# செந்தமிழ்க் கல்லூரி



## மதுரைத் தமிழ்ச் சங்கம்

( தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது )
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

**2011 - 2012ஆம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது**

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் [illegible] பயிற்சி, [illegible] மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, [illegible] திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

முனைவர் மு. மீனா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இரா. குரு[illegible]மி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி


அனுப்புநர்,
**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை – 625 001

21-A

*From*
**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

POSTAGE PAID ... BUSINESS POST CENTRE ... MADURAI

பெறுநர் / To,

திருமிகு.இரா.அழகுமலை
எம்.ஏ.,எம்.ஃ.பில்., அவர்கள்,
21-A முத்துராமலிங்கத் தேவர் தெரு,
கோச்சடை,
மதுரை 625 010.

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.